# 10 டால்பின்®

## உன்னால் முடியும்

## சமூக அறிவியல்

புதிய பதிப்பு



**Avail வரைபடப் பயிற்சிப் புத்தகம்**

100/100 உறுதி

- PTA, அரசுத்தேர்வு வினாக்களுக்குரிய விடைகள் இணைக்கப்பட்டுள்ளன
- அனைத்துப் பகுதி வினாக்களுக்கும் விடைகள் கொண்ட முழுமையான கையேடு

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி இணைக்கப்பட்டுள்ளது

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

## ஆர்டர்களுக்கு மாவட்ட வாரியாக எங்கள் நிர்வாக எண்களை தொடர்பு கொள்ளவும்.

| மாவட்டங்கள் | எண் |
|---|---|
| அரியலூர், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு | 98653 06197 |
| கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி | 89256 77710 |
| நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை | 99435 67646 |
| இராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி | 99435 67646 |
| தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி | 93453 14146 |
| திருப்பத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, நீலகிரி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் | 93453 30937 |

எங்களது ஒரே நிறுவனம் டால்பின் பப்ளிகேசன்ஸ் மட்டுமே. எங்களுக்கு வேறு இணை நிறுவனங்கள் எதுவும் கிடையாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# டால்பின்®

## 10

## உன்னால் முடியும்

# சமூக அறிவியல்

**புதிய பதிப்பு**

**சிறப்பு அம்சங்கள்**

1. பாட நூலின் வினா - விடைத்தொகுப்பு
2. அரசுத்தேர்வு வினா - விடைத்தொகுப்பு
3. பெற்றோர் ஆசிரியர் கழக வினா - விடைத்தொகுப்பு
4. காலக்கோடு - எளிய பயிற்சிகளுடன்
5. வரைபடங்கள் - பாடவாரியாகவும், மதிப்பெண் வாரியாகவும்
6. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி பாடவாரியாக இணைக்கப்பட்டுள்ளது

**Avail**
**வரைபடப் பயிற்சிப் புத்தகம்**

98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

**விலை : ரூ. 171**

# பதிப்புரை

**சமூக அறிவியல் ஆசிரிய பெருமக்கள் மற்றும் பத்தாம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு முதற்கண் வணக்கம்.**

➤ எங்கள் டால்பின் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் சமூக அறிவியல் கையேடு,

- ✳ மாணவர்களுக்கு என்ன தேவை.
- ✳ மாணவர்கள் தேர்வை எவ்வாறு எதிர்கொள்வது.

➤ என்பன போன்ற பல நல்ல செயல் வடிவங்களை மனதில் கொண்டு பல சமூக அறிவியல் ஆசிரியர் பெருமக்களின் ஆலோசனைகளுக்கு இணங்க சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

➤ தமிழக அரசு திருத்தியமைத்து வெளியிட்ட ஒரே புத்தகத்தின் அடிப்படையில் புத்தக வினா விடைகள் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையான வார்த்தைகள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

➤ 5 மற்றும் 8 மதிப்பெண் வினாக்கள் Key Words கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

➤ மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி இணைக்கப்பட்டுள்ளது.

**வரைபட பயிற்சி புத்தகத்தில்,**

➤ PTA 1 முதல் 6 மாதிரி வினாத்தாள்களுக்கும் விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

➤ வரைபடங்கள் தேர்வில் கேட்கப்படும் வரைபடம் கொண்டு எளிதில் வரையும் வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது.

➤ தேர்வை எதிர்கொள்ளும் வகையில் 5 மதிப்பெண்கள், 8 மதிப்பெண்கள் எனப் பிரித்து பயிற்சி வரைபடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

➤ மாணவர்கள் தேர்வில் 100/100 மதிப்பெண் பெறும் வகையில் எங்களது கையேடு மற்றும் வரைபட பயிற்சி புத்தகமானது வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்புடன்**
**பாட வல்லுநர் குழு,**
**டால்பின் பதிப்பகத்தார்.**

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | : **9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | : **9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | : **9345330937** |
| வலைதளம் (Website) | : **www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | : **dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

**ICICI BANK**

A/C No : 446005500030

IFSC CODE : ICIC0004460

BRANCH : Srivilliputtur

**CITY UNION BANK**

A/C No : 328109000204092

IFSC CODE : CIUB0000328

BRANCH : Srivilliputtur

**TAMILNADU MERCANTILE BANK**

A/C No : 328150310875103

IFSC CODE : TMBL0000328

BRANCH : Srivilliputtur

**KARUR VYSYA BANK**

A/C No : 1804135000006000

IFSC CODE : KVBL0001804

BRANCH : Srivilliputtur

ICICI Bank iMobile · BHIM · pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay

**94427 17794**
**63743 17883**

**✷ பணம் / G-PAY செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பாடப்பொருளாக்கம்

| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| **வரலாறு** | | | |
| 1. | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் | 1 | ஜுன் |
| 2. | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் | 9 | ஜுலை |
| 3. | இரண்டாம் உலகப்போர் | 16 | ஜுலை |
| 4. | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 21 | ஆகஸ்ட் |
| 5. | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 27 | ஆகஸ்ட்&செப்டம்பர் |
| 6. | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் | 34 | அக்டோபர் |
| 7. | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் | 41 | அக்டோபர் |
| 8. | தேசியம்: காந்திய காலகட்டம் | 47 | நவம்பர் |
| 9. | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் | 56 | நவம்பர் |
| 10. | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் | 63 | நவம்பர்& டிசம்பர் |
| | காலக்கோடு, வரைபடம் | 71, 76 | |

| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| | **புவியியல்** | | |
| 1. | இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 81 | ஜூன் |
| 2. | இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் | 90 | ஜூன் |
| 3. | இந்தியா – வேளாண்மை | 99 | ஜூலை |
| 4. | இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 111 | ஆகஸ்ட் |
| 5. | இந்தியா – மக்கள்தொகை, போக்குவரத்து, தகவல்தொடர்பு மற்றும் வணிகம் | 119 | ஆகஸ்ட் |
| 6. | தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள் | 128 | அக்டோபர் |
| 7. | தமிழ்நாடு – மானுடப் புவியியல் | 137 | நவம்பர் |
| | பாடவாரியாக வரைபடங்கள் | 146 | |
| | தேர்வு வாரியாக வரைபடங்கள் | 164 | |

| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
| --- | --- | --- | --- |
| | **குடிமையியல்** | | |
| 1. | இந்திய அரசியலமைப்பு | 175 | ஜூன் |
| 2. | நடுவண் அரசு | 182 | ஜூலை |
| 3. | மாநில அரசு | 188 | ஆகஸ்ட் |
| 4. | இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை | 194 | அக்டோபர் |
| 5. | இந்தியாவின் சர்வதேச உறவுகள் | 200 | நவம்பர் |
| | **பொருளியல்** | | |
| 1. | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் | 208 | ஜூன் |
| 2. | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 215 | ஜூலை |
| 3. | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து | 220 | ஆகஸ்ட் |
| 4. | அரசாங்கமும் வரிகளும் | 227 | அக்டோபர் |
| 5. | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் | 234 | நவம்பர் |
| | செப்டம்பர் – 2020 | 240 | |
| | ஏப்ரல் – 2023 | 242 | |
| | ஜீன் – 2023 | 245 | |
| | ஏப்ரல் – 2024 | 248 | |

# வரலாறு

## அலகு – 1

## முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்




### ✷ கற்றல் விளைவுகள்:

**SS907** ➢ அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப்புரட்சி, ரஷ்யப் புரட்சி மற்றும் இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் போன்ற இந்தியாவையும் உலகையும் மாற்றிய சில சமூக அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகளில் பெயர்கள் இடங்கள் மற்றும் ஆண்டுகளை நினைவு கூர்தல்.

**SS913** ➢ பிரெஞ்சு மற்றும் ரஷ்யபுரட்சிகள் போன்ற உலகின் முக்கியமான புரட்சிகளுக்கு வழிவகுத்த நிகழ்வுகளின் போக்கை ஒப்பிடுதல்.

**SS919** ➢ பல்வேறு புரட்சிகளின் காரணங்கள் மற்றும் விளைவுகளை விளக்குதல்.

**பயிற்சி** **பக்கம் : 16**

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை ?**

அ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, உதுமானியர் ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, ரஷ்யா

இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, இத்தாலி

**[அ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, உதுமானியர்]**

**2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது ?** **(JUNE-23)**

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா **[ஆ) ஜப்பான்]**

**3. ‘ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்’ எனக் கூறியவர் யார் ?** **(PTA-6, MAY-2022)**

அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மா சே துங் **[அ) லெனின்]**

**4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது ?** **(APR-2024)**

அ) ஆகாயப் போர் முறை ஆ) பதுங்குக் குழிப் போர் முறை

இ) நீர்மூழ்கிக் கப்பல் போர் முறை ஈ) கடற்படைப் போர் முறை **[ஆ) பதுங்குக் குழிப் போர் முறை]**

5. **பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?**
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
**[அ) பிரிட்டன்]**

6. **பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது ?** **(SEP-2021)**
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ் **[ஆ) ரஷ்யா]**

## கூடுதல் வினாக்கள்

7. **ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு (QY-2019)**
அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து இ) ரஷ்யா இ) பிரான்ஸ் **[ஆ) இங்கிலாந்து]**

8. **இத்தாலிய படை எத்தியோப்பியப் படையால் தோற்கடிக்கப்பட்ட இடம்.** **(SEP-2020)**
அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ் **[இ) அடோவா]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. **1894**ம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட **லண்டன்** உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது. **(MAY-2022)**
3. **1902**ம் ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் **மாசிடோனியா** நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் **ரஷ்யா** பேரிழப்புகளுக்கு உள்ளானது. **(APRIL-2023)**
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் **கிளமென்சோ** ஆவார்.

## கூடுதல் வினாக்கள்

7. **1925 ம்** ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **(PTA-1) (AUG-2022)**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) துருக்கியப் பேரரசு பால்கனில் துருக்கியரல்லாத பல இன மக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
அ) i, ii ஆகியன சரி ஆ) i, iii ஆகியன சரி இ) ii, iii ஆகியன சரி ஈ) i, ii, iii ஆகியனசரி
**[ஈ) i, ii, iii ஆகியனசரி]**

2. **கூற்று** : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
**காரணம்** : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி
ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு
**[அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.]**

## IV. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை | வெர்செய்ல்ஸ் | **ரஷ்யாவும் ஜெர்மனியும்** |
| 2. | ஜிங்கோயிசம் | துருக்கி | **இங்கிலாந்து** |
| 3. | கமால் பாட்சா | ரஷ்யாவும் ஜெர்மனியும் | **துருக்கி** |
| 4. | எம்டன் | இங்கிலாந்து | **சென்னை** |
| 5. | கண்ணாடி மாளிகை | சென்னை | **வெர்செய்ல்ஸ்** |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சீன – ஜப்பானியப்போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

- கி.பி.1894–ல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.
- சீன– ஜப்பானியப் போரில் (1894–1895) சீனாவைச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்து உலகை வியக்க வைத்தது.
- ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளை மீறி சீனாவின் லியோடங் தீபகற்பத்தை தனது ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்தது.
- கிழக்கு ஆசியாவில் “தானே வலிமை மிகுந்த அரசு” என ஜப்பான் உலகிற்கு காட்டியது.

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** **(AUG-2022, QY, HY-2019)**

- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- ரஷ்யா

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?** **(PTA-1, HY-2019)**

- இங்கிலாந்து – ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism)
- பிரான்ஸ் – அதி தீவிரப்பற்று (Chauvinism)
- ஜெர்மனி – வெறிகொண்ட நாட்டுப் பற்று (Kultur)

**4. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** **(PTA-3, SEP-2021, APRIL-2023)**

- போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக்குழிகள்.
- எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள உதவின.
- பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.
- அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும்.

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?**

- துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்து நவீனமாக்கியவர்.
- துருக்கியை மீண்டும் மறுபிறவி எடுக்க வைத்தார்.
- துருக்கியின் எதிர்மறை எண்ணங்களை போக்கியவர்.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக** **(PTA-5)**

- பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாக இருந்தது.
- சங்கத்திற்கு என பொதுவான ராணுவம் இல்லை.
- இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைக்கு கட்டுப்பட மறுத்தன.
- பன்னாட்டுச் சங்கத்தில் கூட்டுப்பாதுகாப்பு எனும் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

## கூடுதல் வினாக்கள்

**7. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் இரண்டு சரத்துக்களைக் கூறுக.** **(PTA- 6)**

- போரைத் தொடங்கிய குற்றத்திற்காக ஜெர்மனி போர் இழப்பீடு வழங்க வேண்டும்.
- அல்சேஸ் – லொரைன் பகுதிகள் பிரான்சிற்குத் திருப்பித் தரப்பட வேண்டும்.
- ஆஸ்திரியா ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.

**8. ரஷ்யப்புரட்சியின் உலகளாவியத் தாக்கத்தின் விளைவுகள் யாவை ?** **(SEP-2020)**

- உலக நாடுகளின் கற்பனையைத் தூண்டியது.
- பல நாடுகளில் கம்யூனிச அரசுகள் உருவாக்கப்பட்டன.
- ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளின் விடுதலைக்கு போராட ஊக்குவித்தது.
- நிலச்சீர்திருத்தம்,சமூக நலன், தொழிலாளர் நலன், பாலின சமத்துவம் உலகளவில் பரவியது.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** **(PTA-1, SEP-20, 21, MAY-22, APR-24)**

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும்,எதிர் அணி சேர்க்கைகளும்:**

- கி.பி.1900–களில் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.
- ஒரு முகாம் மைய நாடுகள் – ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, இத்தாலி இவை 1882–ல் மூவர் உடன்படிக்கை மேற்கொண்டது.
- மற்றொரு முகாம் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளைக் கொண்ட "மூவர்கூட்டு" உருவாக்கப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம்**

- இங்கிலாந்தின் – ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்சின் – அதிதீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகியவை தீவிர போர் வெடிப்பிற்கு வழி வகுத்தது.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

- ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.
- ஜெர்மனியின் கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.
- இங்கிலாந்து, கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை**

- பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்கள்.
- 1871 போரில் பிரான்சு, ஜெர்மனியிடம் தோல்வியுற்று தனது அல்சேஸ், லொரைன் பகுதிகளை இழக்க நேரிட்டது.
- மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு பிரான்சிற்கு கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு**

- 1908–ல் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியில் இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.
- ஆஸ்திரியா செர்பியாவின் மீது படையெடுக்கும் போது, செர்பியாவிற்கு ரஷ்யா உதவுமானால் ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக நான் களமிறங்குவேன் என ஜெர்மனி அறிவித்தது.

**பால்கன் போர்கள்**

- பால்கன் நாடுகள் துருக்கி பலவீனம் அடைந்ததைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக தங்களை விடுவித்துக் கொண்டது.
- மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர பால்கன் நாடுகளான கீரிஸ், செர்பியா, பல்கேரியா, மாண்டிநீக்ரோ இடையே போட்டி ஏற்பட்டது.

**உடனடிக்காரணம்**

- பாஸ்னியாவிலுள்ள செராஜிவோ நகரில் 1914 ஜீன் 28–ம் நாள் ஆஸ்திரிய இளவரசர் பிரான்சிஸ் பெர்டினாண்டு செர்பிய இளைஞனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- ஆஸ்திரியா இந்நிகழ்வை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாகக் கருதியது.
- செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்ற வதந்தி நிலவியது.
- உடனே ஜெர்மனி, ரஷ்யா மீது போர் தொடுக்க முதல் உலகப்போர் தொடங்கியது.

---

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.**

**(PTA-2, JUNE-23)**

- போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் ஜெர்மனி போர் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.
- ஜெர்மனி தனது படையில் 1,00,000 வீரர்களை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- ஆஸ்திரியா,ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.
- ஜெர்மனியின் அனைத்து காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.
- பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கையும், புகாரெஸ்ட் உடன்படிக்கையும் திரும்பப்பெற வலியுறுத்தப்பட்டது.
- அல்சேஸ் – லொரைன் பகுதிகளை பிரான்சிற்கு ஜெர்மனி தர வேண்டும்.
- வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும், சிறிய பகுதிகள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.
- போலந்து நாடு மீண்டும் உருவாக்கப்பட்டது.
- நேச நாடுகளின் ஆக்கிரமிப்பின் கீழ் ரைன்லாந்து இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

---

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின்போக்கினை விளக்குக.**

**லெனின் அறிமுகம்:**

- 1870–ல் லெனின் ரஷ்யாவின் வோல்கா பகுதியில் பிறந்தார்.
- கார்ல் மார்க்ஸின் சிந்தனைகளால் லெனின் பெரிதும் கவரப்பட்டார்.
- லெனின் மற்றும் அவரது ஆதரவாளர்கள் போல்ஷ்விக்குகள் எனப்பட்டனர்.

**தற்காலிக அரசின் தோல்வி:**

- புரட்சி வெடித்த போது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார்.
- புரட்சி தொடர்ந்து நடைபெற விரும்பிய லெனின் "அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே'' என்று முழங்கினார்.
- போர்க்காலத்தில் எழுந்த உணவுப் பற்றாக்குறையால் ''ரொட்டி, அமைதி, நிலம்'' என்ற இவரது முழக்கம் அனைத்து மக்களையும் கவர்ந்தது.
- போல்ஷ்விக்கின் ''பிரவ்தா'' பத்திரிக்கை தடை செய்யப்பட்டது.

**லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல்:**

- 1917 – அக்டோபர் திங்களில் லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவைக் கூட்டி அரசுக்கு எதிராக புரட்சி குறித்து முடிவெடுக்கக் கேட்டுக்கொண்டார்.
- லெனின் ஆலோசனையின் பேரில் டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டம் தயாரித்தார்.

- ❖ நவம்பர் 7–ல் ரஷ்யாவின் அரசு கட்டடங்கள், அரண்மனைகள்,பிரதமர் அலுவலகக் கட்டிடங்கள் அனைத்தும் ஆயுதமேந்திய லெனின் போல்ஷ்விக் கட்சியினரால் கைப்பற்றப்பட்டது.
- ❖ 1917 நவம்பர் 8–ல் ரஷ்யாவில் லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி பெயர் மாற்றப்பட்டு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயருடன் ஆட்சிப் பொறுப்பேற்றது.

**புரட்சியின் விளைவுகள்:**

- ❖ ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எழுத்தறிவின்மை, வறுமையை ஒழித்தது.
- ❖ ரஷ்ய தொழிற்துறை, வேளாண்மை வளர்ச்சியடைந்தது.
- ❖ பெண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டன.
- ❖ ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டது.
- ❖ 1918–ல் பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை கையெழுத்தானது.

---

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** **(PTA-4, APR-2024)**

- ❖ முதல் உலகப் போரின் முடிவில் உலகில் அமைதி நிலவ 1920–ல் சுவிட்சர்லாந்து ஜெனீவாவில் பன்னாட்டுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ 1920–1925 – கால ஆண்டுகளில் பல சிக்கல்களைத் தீர்த்து வைத்தாலும் மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் வெற்றி பெற்றது.

**முதல் தீர்வு:**

- ❖ 1920–ல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பிரச்சனை ஏற்பட்டது.
- ❖ பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகளை பின்லாந்திற்குச் சொந்தமானது என தீர்ப்பளித்தது.

**இரண்டாம் தீர்வு:**

- ❖ ஜெர்மனிக்கும் போலந்திற்கும் மேற்கு சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்ட போது சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

**மூன்றாம் தீர்வு:**

- ❖ கிரீஸ் ,பல்கேரியா மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- ❖ விசாரணை செய்த சங்கம் கிரீஸ் போர் இழப்பீடு தர வேண்டும் என தீர்ப்பளித்தது.

**1925–லொக்கர்னோ உடன்படிக்கை:**

- ❖ 1925– லொக்கர்னோ உடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி, ஆசிய நாடுகள் ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதியுடன் இருக்க உத்தரவாதம் அளித்தது பன்னாட்டுச் சங்கத்தின் மிகப்பெரும் வெற்றியாகும்.
- ❖ இதன் பின்னரே ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்து பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடம் பிடித்தது.

---

## கூடுதல் வினாக்கள்

**5. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை ? (4 Marks)** **(PTA- 6)**

- ➢ பன்னாட்டுச்சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாக காணப்பட்டது.
- ➢ சங்கத்திற்கென்று இராணுவம் இல்லையாதலால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை.
- ➢ அமைதிக்காக உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணரவில்லை.
- ➢ கூட்டுப் பாதுகாப்பு எனும் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தவில்லை.
- ➢ சர்வாதிகாரிகளால் தலைமையேற்றப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட மறுத்தது.
- ➢ பன்னாட்டுச் சங்கத்தில் இங்கிலாந்து – பிரான்ஸ் – ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையில் இருந்தது.

6. **பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.** **(MAY-2022)**

- ❖ பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.
- ❖ சவால்கள் நிறைந்த இப்பணி அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் கொடுத்த அழுத்தத்தால் நிறைவேறியது.
- ❖ இவ்வமைப்புக்கான அரசியலமைப்பு விதிகளை உருவாக்கியதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆலோசனை மேலோங்கியிருந்தது.
- ❖ முதல் உலகப் போரின் முடிவில் உலகில் அமைதி நிலவ 1920–ல் சுவிட்சர்லாந்து ஜெனீவாவில் பன்னாட்டுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

**பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்புகள்:**

- ❖ பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு இதன் உறுப்புகளாகும்.
- ❖ பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தது.
- ❖ பன்னாட்டு சங்கத்தின் செயலகம் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.
- ❖ பன்னாட்டு நீதிமன்றம் பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது.

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி

### சுருக்கமாக விடையளி

1. **சீன – ஜப்பானியப்போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய் ?**

- ➢ 1894 –ல் ஜப்பான் சீனாவின் மீது வலுக்கட்டாயமாக போரை செய்து வெற்றி பெற்றது.
- ➢ சீனாவின் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் இணைத்தது
- ➢ ஆசியாவில் “நானே வலிமை மிகுந்த அரசு” என ஜப்பான் உலகிற்கு காட்டியது.

2. **மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- ➢ இங்கிலாந்து – பிரான்ஸ் – ரஷ்யா

3. **ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?**

- ➢ இங்கிலாந்து – கண்மூடித்தனமான நாட்டுப்பற்று
- ➢ பிரான்ஸ் – அதி தீவிரப்பற்று
- ➢ ஜெர்மனி – ஜெர்மானிய கலாச்சாரம் உயர்வு

4. **பதுங்கு குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?** **(PTA-3)**

- ➢ போர்வீரர்களால் தோண்டப்படும் பதுங்கு குழிகள்.
- ➢ வீரர்கள் தங்களை பாதுகாக்க தோண்டியது.
- ➢ பதுங்கு குழிகள் ஒவ்வொன்றும் இணைந்து இருக்கும்.
- ➢ இக்குழிகள் மூலம் உணவு மற்றும் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட்டது.

5. **முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன ?**

- ➢ துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்து சிறந்த நாடாக்கினார்.
- ➢ துருக்கியை நவீனமாக்கி எதிர்மறை எண்ணங்களை போக்கியவர்.
- ➢ சுல்தானியத்திற்கும், கிலாபத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தவர்.

6. **பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.** **(PTA-5)**

- ➢ சங்கத்திற்கு பொதுவான ராணுவம் இல்லை.
- ➢ கூட்டுப்பாதுகாப்பு முறையை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

### விரிவான விடையளி

1. **முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.**

**ஐரோப்பிய நாடுகள் அணி சேர்க்கைகள் எதிர் அணிசேர்க்கை:**

- ❖ இங்கிலாந்து – பிரான்ஸ் – ரஷ்யா ஓர் அணி
- ❖ ஜெர்மனி – இத்தாலி – ஆஸ்திரியா – ஹங்கேரி ஓர் அணி

**வன்முறை சார்ந்த தேசியம்**

- ➢ இங்கிலாந்து – கண்மூடித்தனமான நாட்டுப்பற்று
- ➢ பிரான்ஸ் – அதி தீவிரப்பற்று
- ➢ ஜெர்மனி – ஜெர்மானிய கலாச்சாரம் உயர்வு

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு**

- ❖ இரண்டாம் கெய்சர் வில்லியம் ஆக்கிரமிப்புக் கொள்கை.

**பிரான்ஸ் – ஜெர்மனியுடன் கொண்ட பகை**

- ❖ பால்கன் நாடுகள் பிரச்சனைகள்
- ❖ பால்கன் போர்கள்

**போரின் உடனடிக் காரணம்**

- ❖ ஆஸ்திரிய இளவரசர் பெர்டினான்ட் படுகொலை.

---

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக. (PTA-2)**

- ❖ ஜெர்மனி போர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல்
- ❖ ஜெர்மனி படைகள் வைத்துக்கொள்ள அனுமதி இல்லை
- ❖ ஆஸ்திரிய – ஜெர்மனி ஒருங்கிணைப்புத் தடை விதிக்கப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் கடல்கடந்த காலனிகள் பறிக்கப்பட்டது.
- ❖ அல்சேஸ் – லொரைன் பகுதிகள் பிரான்சிற்கு கொடுக்கப்பட்டது.
- ❖ போலந்து நாடு மீண்டும் உருவாக்கப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் ரைன்லாந்து நேச நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருக்க வேண்டும்.
- ❖ ஜெர்மனியின் டான்சிக் துறைமுகம் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

---

**3. லெனின் தலைமையிலான ரஷ்ய புரட்சியின்போக்கினை விளக்குக.**

- ❖ லெனின் மற்றும் அவரது ஆதரவாளர்கள் போல்ஷ்விக்குகள் எனப்பட்டனர்.
- ❖ சிறுபான்மை போல்ஷ்விக்குகளை மென்ஷ் விக்குகள் அச்சுறுத்தினர்.
- ❖ லெனின் வருகையால் ரஷ்ய அரசியல் சூழ்நிலை மாறியது.
- ❖ ரஷ்யாவில் சார் மன்னர்களின் ஆட்சி முடிவுற விரும்பியவர்கள்.
- ❖ தொழிலாளர்களிடம் பேசிய இவரது பேச்சு அனைவரையும் கவர்ந்தது.
- ❖ இவரது முழக்கம் ரொட்டி – அமைதி – நிலம் என்பதாகும்.
- ❖ போல்ஷ்விக் கட்சியின் மத்திய குழுவை கூட்டியவர்.
- ❖ டிராட்ஸ்கி லெனின் ஆலோசனையின் பேரில் ஒரு விரிவான திட்டம் தயாரித்தார்.
- ❖ ஆயுதமேந்திய போல்ஷ்விக்குகள் மன்னரின் அரண்மனையை கட்டிடங்களை கைப்பற்றுதல்.
- ❖ 1917–ல் லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ரஷ்ய அரசைக் கைப்பற்றியது.
- ❖ பின்னர் கம்யூனிஸ்ட் அரசாக மாறி சோவியத் ரஷ்யாவை ஆட்சி செய்தார்.

---


**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.**

- ❖ 1920–1925 –களில் பல சிக்கல்களைத் தீர்த்து வைத்தது.
- ❖ அதில் மூன்று முக்கியமான பிரச்சனைகளை தீர்த்து வைத்தது.
- ❖ பின்லாந்து சுவீடன் பிரச்சனையில் ஆலேண்டு தீவு பின்லாந்துக்கு என தீர்ப்பளித்தது.
- ❖ போலந்து – ஜெர்மனியின் சைலேஷியா பிரச்சனையை தீர்த்து வைத்தது.
- ❖ 1925 கிரீஸ் – பல்கேரியா பிரச்சனையில் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.
- ❖ 1925–ல் லொக்கார்னோ உடன்படிக்கை ஏற்படுத்தி அமைதியை ஏற்படுத்தியது.
- ❖ ஜெர்மனியை பன்னாட்டுச் சங்கத்தில் இணைத்தது.
- ❖ அமெரிக்கா ரஷ்யாவை சங்க நடவடிக்கைகளும் ஈடுபடச் செய்தது.


## காலக்கோடு


### உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் ( 1900 - 1950 )


1900 – ஆப்பிரிக்கா காலனியாக மாறுதல்
1902 – ஆங்கிலோ – ஜப்பான் உடன்படிக்கை
1908 – இளம் துருக்கியர் புரட்சி
1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
1912 – முதல் பால்கன் போர்
1914 – முதலாம் உலகப்போர் தொடக்கம்
1917 – ரஷ்யப் புரட்சி
1918 – முதல் உலகப்போர் முடிவு
1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்
1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 – வியட்நாம் தேசியக் கட்சி உதயம்
1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை
1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் ( முக்கிய அமைச்சர்) ஆதல்
1934 – மாவோவின் நீண்ட பயணம்
1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது
1938 – மியூனிச் உடன்படிக்கை
1939 – இரண்டாம் உலகப்போர் தொடக்கம்
1940 – பிரிட்டன் போர்
1941 – முத்துத் துறைமுக நிகழ்வு
1942 – ஸ்டாலின் கிரேடு போர்
1945 – இரண்டாம் உலகப்போர் முடிவு
1948 – இஸ்ரேல் நாடு உருவாதல்
1950 – கொரியப்போர்



வரலாறு முதல் நான்கு பாடங்களுக்குரிய உலக வரைபட இடங்கள்






| | | | | |
|---|---|---|---|---|
| **1.** டெல்லி | **11.** கோவா | **21.** சௌரி சௌரா | **31.** பம்பாய் | **41.** காஷ்மீர் |
| **2.** ஆக்ரா | **12.** சதாரா | **22.** சிட்டா காங் | **32.** பூனா | **42.** பராக்பூர் |
| **3.** கான்பூர் | **13.** நாக்பூர் | **23.** பாரதீப் | **33.** தண்டி | **43.** வங்காளம் |
| **4.** அலகாபாத் | **14.** சம்பரான் | **24.** விசாகாபட்டினம் | **34.** பர்தோலி | **44.** அசாம் |
| **5.** பனாரஸ் | **15.** ஜான்சி | **25.** பாண்டிச்சேரி | **35.** கேடா | **45.** வங்காள விரிகுடா |
| **6.** ஆரா | **16.** மீரட் | **26.** வேதாரண்யம் | **36.** அகமதாபாத் | **46.** அந்தமான் தீவு |
| **7.** கல்கத்தா | **17.** லாகூர் | **27.** இராமேஸ்வரம் | **37.** காண்ட்லா | **47.** இந்தியப் பெருங்கடல் |
| **8.** மதராஸ் | **18.** பரெய்லி | **28.** தூத்துக்குடி | **38.** ராண் ஆப் கட்ச் | **48.** லட்சத்தீவு |
| **9.** பெங்களூர் | **19.** லக்னோ | **29.** கன்னியாகுமரி | **39.** இராஜஸ்தான் | **49.** அரபிக்கடல் |
| **10.** மங்களூர் | **20.** கோரக்பூர் | **30.** திருவனந்தபுரம் | **40.** அமிர்தசரஸ் | **50.** வார்தா |

# புவியியல்

## அலகு – 1

# இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு



### கற்றலின் நோக்கங்கள்

T2UEF4

- புவியில், இந்தியாவின் அமைவிட முக்கியத்துவத்தைப்பற்றி புரிந்துகொள்ளல்
- இந்தியாவின் முக்கிய தனித்துவப் பண்புகளைக் கொண்ட இயற்கையமைப்புப் பிரிவுகளைப் பற்றி அறிந்துகொள்ளல்
- இந்திய பெரும் சமவெளிப் பகுதிகளை ஒப்பிடுதல்
- இந்தியாவின் வடிகாலமைப்பு பற்றி புரிந்துகொள்ளல்
- இமயமலையில் உருவாகும் ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகளுக்கு இடையேயான வேற்றுமைகளைப் புரிந்துகொள்ளல்

### ✷ கற்றல் விளைவுகள்:

**SS901** ➢ இந்திய நிலவரைபடத்தில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் இயற்கை அமைப்பு நிலத்தோற்றங்களை குறித்தல்.

**SS902** ➢ பல்வேறுபட்ட இயற்கை நிலத்தோற்றங்கள், காடுகளின் வகைகள், பருவகாலங்கள் போன்றவற்றை அடையாளம் கண்டுகொள்ளல் மற்றும் விவரித்தல்.

**SS903** ➢ திட்ட தீர்க்ககோடு, வடிகால்படுகை, நீர்பிரிவுகள் பருவக்காற்றுகள், வானிலை, காலநிலை, தாவரங்கள், விலங்குகள், மக்கள் அடர்த்தி போன்ற புவியியலின் முக்கியபதங்களை விவரித்தல்.

**பயிற்சி** **பக்கம் : 151**

### I.சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்

அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி. ஈ) 2814 கி.மீ **[இ) 3214 கி.மீ]**

**2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு**

அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர் **[இ) கோசி]**

**3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ------------ என அழைக்கப்படுகிறது.** **(PTA-3)**

அ) கடற்கரை ஆ) தீவு இ) தீபகற்பம் ஈ) நீர்ச்சந்தி **[ஆ) தீபகற்பம்]**

**4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ------ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. (PTA-4, MAY-22, JUNE-23)**

அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் இ) இலங்கை ஈ) மாலத் தீவு **[இ) இலங்கை]**

**5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் --------** **(PTA-2, GMQ-2019)**

அ) ஊட்டி ஆ) கொடைக்கானல் இ) ஆனைமுடி ஈ) ஜின்டா கடா

**[ஆ) ஆனை முடி]**

**6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ----------**

அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர் **[இ) பாங்கர்]**

**7. பழவேற்காடு ஏரி ------ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.** **(PTA-1, AUG-2022, APR-2024)**

அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா

இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்

**[ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்]**

## கூடுதல் வினாக்கள்

**8. இந்தியாவிற்குச் சொந்தமான இரண்டு தீவுகள் எவை?** **(PTA-6)**

அ) அந்தமான் மற்றும் நிகோபார் ஆ) அந்தமான் நிகோபார் மற்றும் லட்சத்தீவுகள்

இ) மாலத்தீவு மற்றும் நிகோபார் ஈ) இலங்கை மற்றும் அந்தமான்

**[ஆ) அந்தமான் நிகோபார் மற்றும் லட்சத்தீவுகள்]**

**9. இந்தியாவிலேயே மிகப்பழமையான மடிப்பு மலைத் தொடர்** **(QY-2019)**

அ) ஆரவல்லி மலைத்தொடர் ஆ) மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர்

இ) லடாக் தொடர் ஈ) கைலாஷ் மலைத்தொடர் **[அ) ஆரவல்லி மலைத்தொடர்]**

**10. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.** **(SEP-2020)**

அ) கொல்லேறு ஏரி ஆ) வேம்பநாடு ஏரி இ) சிலிகா ஏரி ஈ) பழவேற்காடு ஏரி

**[ஆ) வேம்பநாடு ஏரி]**

**11.** ___________ இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பு ஆகும். **(PTA-3)** **(கங்கையாற்றின் தொகுப்பு)**

**12.** ___________ ஆறு விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது. **(PTA-6)** **(கோதாவரி)**

## II.பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1 | சாங்போ **(GMQ-2019)** | கங்கை ஆற்றின் துணை ஆறு | **பிரம்மபுத்திரா** |
| 2 | யமுனை | இந்தியாவின் உயரந்த சிகரம் | **கங்கை ஆற்றின் துணை ஆறு** |
| 3 | புதிய வண்டல் படிவுகள் | பிரம்மபுத்திரா | **காதர்** |
| 4 | காட்வின் ஆஸ்டின் ($K_2$) | தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி | **இந்தியாவின் உயரந்த சிகரம்** |
| 5 | சோழ மண்டல கடற்கரை **(PTA-5)** | காதர் | **தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி** |

## III. காரணம் கூறுக.

**1. இமய மலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.** **(MAY-2022)**

- இமயமலைகள் சில மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே உருவானவை.
- வடக்கே இருந்த யுரேசியா நிலப்பகுதியும் தெற்கே இருந்த கோண்ட்வானா நிலப்பகுதியும் ஒன்றை நோக்கி ஒன்று நகர்ந்து அதனால் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக இடையே இருந்த டெத்தீஸ் கடல் மடிக்கப்பட்டு இமயமலை உருவானது.
- இமயமலைகள் புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகளாக உருவாகின.

**2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.** **(PTA-2, HY-2019, APR-2024)**

- வட இந்திய ஆறுகள் பனிப்பிரதேசமான இமயமலைகளில் உற்பத்தியாகின்றது.
- இந்த ஆறுகள் மழைக்காலங்களிலும்,பனி உருகுவதால் கோடை காலங்களிலும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகளாக உள்ளன.
- வட இந்திய ஆறுகள் ஆண்டு முழுவதும் நீர்வரத்து கொண்டவை.

**3. தென்னிந்திய ஆறுகள் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளாகும்.**

- தென்னிந்திய ஆறுகள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலையில் தான் உற்பத்தியாகின்றன.
- இந்த ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு செங்குத்து சரிவுடன் கூடிய பள்ளத்தாக்கு வழியே கிழக்கு நோக்கி பாய்கின்றது.
- கிழக்கு நோக்கி பாய்ந்து சமவெளிகளை உருவாக்கி வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.

## IV. வேறுபடுத்துக

**1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்** **(PTA-5)**

| வ. எண் | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| 1. | இமயமலையில் உற்பத்தியாகிறது | மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது |
| 2. | வற்றாத ஆறுகள் | பருவகால அல்லது வற்றும் ஆறுகள் |
| 3. | ஆறுகள்: சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா | ஆறுகள்: கோதாவரி, கிருஷ்ணா, காவிரி |
| 4. | இவ்வாறுகள் வட இந்தியாவில் பாய்கின்றன. | இவ்வாறுகள் தென்னிந்தியாவில் பாய்கின்றன. |
| 5. | இவ்வகை ஆறுகள் நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படுகிறது. | இவ்வகை ஆறுகள் நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படுவதில்லை. |
| 6. | நீர் மின் உற்பத்தி செய்ய இயலாது. | நீர் மின் உற்பத்திக்கு ஏற்றது. |

**2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்** **(PTA-1, HY-2019, AUG-2022, APRIL-2023)**

| வ. எண் | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1. | மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. |
| 2. | தொடர்ச்சியான மலைத்தொடர் | தொடர்ச்சியற்ற மலைத்தொடர் |
| 3. | இமயமலைகள், தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. | தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளது. |
| 4. | வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படும். | இம்மலைத்தொடர் பூர்வாத்திரி என்றும் அழைக்கப்படும். |

3. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி. **(SEP-2020, 2021)**

| வ. எண் | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி. |
|---|---|---|
| 1. | மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக்கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது. | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. |
| 2. | **பரவல்:** ரான் ஆப் கட்ச் முதல் கன்னியாகுமரி வரை சராசரி அகலம் சுமார் 65 கி.மீ | **பரவல்:** மேற்கு வங்கம் முதல் கன்னியாகுமரி வரை சராசரி அகலம் சுமார் 120 கி.மீட்டர் |
| 3. | கொங்கணம், கனரா, மலபார் கடற்கரைகள் அமைந்துள்ளது. | வட சர்க்கார், சோழ மண்டல கடற்கரைகள் அமைந்துள்ளது. |
| 4. | வேம்ப நாடு ஏரி இப்பகுதியில் உள்ள முக்கிய ஏரியாகும் | சிலிகா ஏரி, கொல்லேறு ஏரி, பழவேற்காடு ஏரி மிக முக்கியமானது. |

## V. சுருக்கமாக விடையளி.

**1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.** **(GMQ-2019)**

- வடமேற்கில் – பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்
- வடக்கில் – சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கில் – வங்காளதேசம் மற்றும் மியான்மர்

**2. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.** **(PTA-2, AUG-2022)**

- இந்தியாவின் கிழக்கில் உள்ள அருணாச்சலப்பிரதேசத்தில், மேற்கில் உள்ள குஜராத்தைக் காட்டிலும் 2 மணி நேரம் முன்னதாக சூரியன் உதிக்கின்றது.
- நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான**82° 30'** கிழக்கு தீர்க்க ரேகையின் தல நேரம் இந்திய திட்ட நேரமாக உள்ளது.
- இத்தீர்க்க ரேகை உத்திரபிரதேச மிர்சாபூர்( பிராக்யாராஜ் – அலகாபாத்) வழியாக செல்கிறது.
- இந்திய திட்ட நேரமானது கிரீன்வீச் சராசரி நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

**3. தக்காண பீடபூமி – குறிப்பு வரைக.** **(QY-2019)**

- தீபகற்ப பீடபூமியின் மிகப் பெரிய இயற்கை அமைப்பு கொண்டது.
- முக்கோண வடிவம் கொண்டது.
- சுமார் 7 லட்சம் ச.கி.மீ பரப்பளவு கொண்டது.
- கடல் மட்டத்திலிருந்து 500 மீட்டர் முதல் 1000 மீ உயரம் கொண்டது.
- வடக்கு – மகாதேவ், மைக்காலா குன்றுகளையும்
- வடமேற்கு – விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களையும்
- கிழக்கு –கிழக்கு தொடர்ச்சி மலைகளையும்
- வடகிழக்கு – இராஜ்மகால் குன்றுகளையும்
- மேற்கு – மேற்குத் தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது.

**4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.** **(PTA-3, JUNE-2023)**

- நர்மதை
- சபர்மதி
- தபதி
- மாஹி

**5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.** **(PTA-4, MAY-2022)**

- இந்தியாவில் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது
- முருகைப் பாறைகளால் ஆனது.
- இதன் தலைநகரம் கவரத்தி
- 32 ச.கி.மீ பரப்பளவு கொண்டது.
- இலட்சத்தீவு, மினிக்காய், மற்றும் அமினித்தீவுக் கூட்டங்கள் அனைத்தும் 1973 முதல் இலட்சத் தீவுகள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.

## கூடுதல் வினாக்கள்

**6. இந்தியாவின் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.** **(HY-2019)**

**I. மகாநதி**

- **நீளம் : 851** கி.மீ.
- **உற்பத்தி :** சத்தீஸ்கார் மாநிலம் ராய்ப்பூர் மாவட்டத்தில் சிகாவிற்கு அருகே உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- **துணையாறுகள் :** சீநாத், டெலன், சித்ரட்லா, சந்தூர், நன்.

**II. கோதாவரி**

- **நீளம் : 1465** கி.மீ.
- **வடிகாலமைப்பு பரப்பளவு : 3.13** இலட்சம் ச.கி.மீ.
- **உற்பத்தி :** மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- **துணையாறுகள் :** பூர்ணா, இந்திராவதி, பென்கங்கா
- **கலக்குமிடம் :** ஆந்திரா வழியாக வங்காள விரிகுடா

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

**1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.** **(PTA-1, SEP-21, AUG-22, APR-2024)**

**இந்தியாவின் இயற்கை அரணாக உள்ள இமயமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.**

1. ட்ரான்ஸ் இமயமலைகள் – மேற்கு இமயமலைகள்
2. இமயமலைகள்
3. பூர்வாஞ்சல் குன்றுகள் – கிழக்கு இமயமலை

**i) ட்ரான்ஸ் இமயமலைகள் – (மேற்கு இமயமலைகள்)**

- இம்மலைகள் ஜம்மு–காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை ''திபெத்தியன் இமயமலை'' எனவும் அழைக்கப்படுகிறது.
- முக்கிய மலைகள் : காரகோரம், லடாக், ஜாஸ்கர், கைலாஷ்.

**ii) இமயமலைகள்**

- உள் இமயமலைகள்– இமாத்ரி:அகலம் 25 கி.மீ., சராசரி உயரம் 6000 மீ.
- மத்திய இமயமலைகள் –இமாச்சல்: அகலம் 80 கி.மீ., சராசரி உயரம் 3500 மீட்டர் முதல் 4500 மீட்டர் வரை
- வெளி இமயமலைகள் – சிவாலிக்:அகலம் 10 முதல் 50 கி.மீ., சராசரி உயரம் 1000 மீ.
- கோடை வாழிடங்கள் சிம்லா – முசௌரி ஆகியவை.
- சிகரங்கள் : எவரெஸ்ட் , கஞ்சன்ஜங்கா.
- பனியாறுகள் : கங்கோத்ரி, சியாச்சின்.

**iii) பூர்வாஞ்சல் குன்றுகள் (கிழக்கு இமயமலை)**

- இமய மலையின் கிழக்குக் கிளையாகும்.
- இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது.
- பெரும்பாலான குன்றுகள் மியான்மர் மற்றும் இந்திய எல்லைகளுக்கிடையே காணப்படுகின்றன.

**iv) முக்கியத்துவம்**

- தென் மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வடபகுதிக்கு கனமழை தருகின்றது.
- வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா)
- பல கோடை வாழிடங்கள் உள்ளன. (சிம்லா,டேராடூன், டார்ஜிலிங்)
- பல புனித தலங்கள் உள்ளன. (அமர்நாத், பத்ரிநாத் ,வைஷ்ணவி கோயில்,கேதார்நாத்)
- காடு சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப் பொருட்கள் அளிக்கிறது.
- மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்க் காற்றை தடுத்து இந்தியாவை கடும் குளிரிலிருந்து பாதுகாக்கின்றது.
- இமயமைலை ஒரு பல்லுயிர் மண்டலமாக விளங்குகிறது.

**2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

**தென்னிந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள்எனப்படும்.**

- மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
- தீபகற்ப ஆறுகள் பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.
  1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் 2. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

**I. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்.**

**i) மகாநதி**

- **நீளம் :** 851 கி.மீ.
- **உற்பத்தி:**சத்தீஸ்கார் மாநிலம் ராய்ப்பூர் மாவட்டத்தில் சிகாவிற்கு அருகே உற்பத்தியாகி ஒடிசா மாநிலத்தின் வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- **துணையாறுகள்:**சீநாத், டெலன், சித்ரட்லா, சந்தூர், நன்.

**ii) கோதாவரி**

- **நீளம்:** 1465 கி.மீ.
- **வடிகாலமைப்பு பரப்பளவு:** 3.13 இலட்சம் ச.கி.மீ.
- **உற்பத்தி:** மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
- **துணையாறுகள்:**பூர்ணா, இந்திராவதி, பென்கங்கா
- **கலக்குமிடம்:** ஆந்திரா வழியாக வங்காள விரிகுடா

**iii) கிருஷ்ணா**

- **நீளம் :** 1400 கி.மீ.
- **வடிகாலமைப்பு பரப்பளவு :** 2.58 இலட்சம் ச.கி.மீ
- **உற்பத்தி ஆகும் இடம்:** மகாராஷ்டிரா மாநிலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் மகாபலேஷ்வர் என்ற நீர் வீழ்ச்சியில் உருவாகிறது.
- **துணையாறுகள்:**கொய்னா, பீமா, துங்கபத்ரா
- **கலக்குமிடம் :** ஆந்திரா வழியாக வங்காள விரிகுடா

**iv) காவிரி**

- **நீளம் :** சுமார் 805 கி.மீ.
- **உற்பத்தி ஆகும் இடம்:** கர்நாடகா மாநிலம் குடகுமலையில் உற்பத்தியாகிறது.
- தென்னிந்தியாவின் கங்கை என்று அழைக்கப்படுகிறது.
- **கலக்குமிடம்:**தமிழகம் வழியாக வங்காள விரிகுடா

**II. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்**

**i) நர்மதை**

- **நீளம்:** 1312 கி.மீ.
- **வடிகாலமைப்பு பரப்பளவு :** 98796 ச.கி.மீ.
- **உற்பத்தியாகும் இடம்:** மத்தியபிரதேசத்தில் அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
- **துணையாறுகள்:**பர்னா, ஹலுன், ஹெரன், கோலர், பஞ்சர்
- **கலக்குமிடம் :** அரபிக்கடல்

**ii) தபதி**

- **நீளம் :** 724 கி.மீ.
- **வடிகாலமைப்பு பரப்பளவு :**65145 ச.கி.மீ.
- **உற்பத்தியாகும் இடம்:** மத்தியப்பிரதேசம் முல்டாய் பகுதியில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக பாய்கிறது.
- **துணையாறுகள்:**வாகி, கோமை, அருணாவதி, பஞ்சரா
- **கலக்குமிடம் :** அரபிக்கடல்

**3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.** **(PTA-4)**

- ❖ கங்கை ஆறு உத்திரகாண்ட் மாநிலத்தில் உள்ள கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்ற பெயருடன் உற்பத்தியாகிறது.
- ❖ கங்கையின் நீளம் சுமார் 2525 கி.மீ ஆகும்.
- ❖ இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டது.
- ❖ கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் இந்தியாவில் பாய்கிறது.
- ❖ கங்கைச் சமவெளி பல நகரங்கள் ஆற்றங்கரை அருகிலும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளது.
- ❖ வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டக் கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
- ❖ வங்கதேசத்தில், கங்கை பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- ❖ கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

**4. தீபகற்ப பீடபூமிகள் பற்றி விவரிக்கவும்.** **(APRIL-2023)**

- ❖ வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது.
- ❖ இந்தியாவின் மிகப்பெரிய இயற்கை பிரிவு.
- ❖ தொன்மையான பாறை அமைப்புகளைஹயம் பல குன்றுகளையும், சிறு பீடபூமிகளையும் கொண்டுள்ளது.
- ❖ எல்லைகள் – மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைகள்<br>கிழக்கே கிழக்கு தொடர்ச்சி மலைகள்
- ❖ ஆனைமுடி சிகரம் இப்பீடபூமியின் உயர்ந்த சிகரம் ஆகும்.
- ❖ இது கோண்ட்வானா நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும்.
- ❖ தீபகற்ப பீடபூமி மத்திய உயர்நிலங்கள் மற்றும் தக்காண பீடபூமியை உள்ளடக்கயிது.
- ❖ மத்திய உயர்நிலங்கள் நர்மதை ஆற்றிற்கும் வடபெரும் சமவெளிக்கும் இடையே அமைந்துள்ளன.

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி

### சுருக்கமாக விடையளி.

**1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.**

- ➢ பாகிஸ்தான்
- ➢ ஆப்கானிஸ்தான்
- ➢ நேபாளம்
- ➢ சீனா
- ➢ பூடான்
- ➢ பங்களாதேஷ்
- ➢ இலங்கை

**2. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.** **(PTA-2)**

- ➢ **82° 30’** கிழக்கு தீர்க்க ரேகையின் தல நேரம் இந்திய திட்ட நேரமாக உள்ளது.
- ➢ இது கிரீன்வீச் சராசரி நேரத்தை விட **5** மணி **30** நிமிடம் முன்னதாக உள்ளது.

**3. தக்காண பீடபூமி – குறிப்பு வரைக.**

- ➢ தீபகற்ப பீடபூமியின் மிகப் பெரிய இயற்கை அமைப்பு கொண்டது.
- ➢ முக்கோண வடிவம் கொண்டது.
- ➢ சுமார் 7 லட்சம் ச.கி.மீ பரப்பளவு கொண்டது.
- ➢ கடல் மட்டத்திலிருந்து **500** முதல் **1000** மீ வரை உயரம் கொண்டவை.

**4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.** **(PTA-3)**

- ➢ நர்மதை
- ➢ தபதி
- ➢ சபர்மதி

**5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.**

- ➢ இந்தியாவில் மேற்கு பகுதி அரபிக்கடலில் அமைந்துள்ள தீவு.
- ➢ முருகைப் பாறைகளால் ஆனது.
- ➢ தலைநகரம் கவரத்தி
- ➢ 32 ச.கி.மீ பரப்பளவு கொண்டது.

## வேறுபடுத்துக.

**1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்** **(PTA-5)**

| | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| 1. | இமயமலையில் உற்பத்தியாகிறது | மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது |
| 2. | வற்றாத ஆறுகள் | வற்றும் பருவகால ஆறுகள் |
| 3. | **ஆறுகள்:** சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா | **ஆறுகள்:** கோதாவரி, கிருஷ்ணா, காவிரி |

**2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்** **(PTA-1)**

| | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1. | மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. |
| 2. | **பரவல்:** நீலகிரி முதல் கன்னியாகுமரி | **பரவல்:** தமிழகத்தின் வட மாவட்டங்கள் |
| 3. | தொடர்ச்சியான மலைகள் | தொடர்ச்சியற்ற மலைகள் |
| 4. | பாலக்காட்டு கணவாய் உள்ளது | கணவாய் இல்லை |

**3. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி.**

| | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி. |
|---|---|---|
| 1. | **பரவல்:** ரான் ஆப் கட்ச் முதல் கன்னியாகுமரி வரை | **பரவல்:** மே. வங்கம் முதல் கன்னியாகுமரி வரை |
| 2. | கொங்கணம், கனரா, மலபார் கடற்கரைகள் அமைந்துள்ளது. | வட சர்க்கார், சோழ மண்டல கடற்கரைகள் அமைந்துள்ளது. |
| 3. | மேற்கில் அரபிக்கடல் உள்ளது | கிழக்கில் வங்காள விரிகுடா உள்ளது |

## காரணம் கூறுக.

**1. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.** **(MAY-2022)**

➢ இமயமலைகள் புவி மேலோட்டு பேரியக்க விசையினால் மடிக்கப்பட்டு உள்ளது.

**2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.** **(PTA-2, HY-2019)**

➢ வட இந்திய ஆறுகள் பனிப்பிரதேசமான இமயமலைகளில் உற்பத்தியாகின்றது.

➢ இந்த ஆறுகள் மழைக்காலங்களிலும், பனி உருகுவதால் கோடை காலங்களிலும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகளாக உள்ளன.

**3. தென்னிந்திய ஆறுகள் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளாகும்.**

➢ தென்னிந்திய ஆறுகள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலையில்தான் உற்பத்தியாகின்றன.

➢ கிழக்கு நோக்கி பாய்ந்து சமவெளிகளை உருவாக்கி வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.

## விரிவான விடையளிக்கவும்.

**1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.** **(PTA-1)**

**இமயமலையின் உட்பிர்வுகள்**

1. **ட்ரான்ஸ் இமயமலைகள் –** மேற்கு இமயமலைகள்
2. **இமயமலை**
   - ❖ இமாத்ரி – சிறிய இமய மலைகள் – இமாச்சல்
   - ❖ சிவாலிக் –வெளி இமயமலைகள்
3. **கிழக்கு இமயமலை – பூர்வாஞ்சல் குன்றுகள்**

**இமயமலைகள் முக்கியத்துவம்**

- தென் மேற்கு பருவக்காற்றை தடுத்து வடபகுதிக்கு கனமழையைத் தருகிறது.
- இந்தியத் துணைக்கண்டத்தில் இயற்கை அரணாக விளங்குகிறது.

**வற்றாத நதிகள் பிறப்பிடம்**

- சிந்து – கங்கை – பிரம்மபுத்திரா
- இயற்கை அழகு நிறைந்த மலைகள்
- சுற்றுலா பயணிகள் சொர்க்கமாக திகழ்கின்றது

**கோடை வாழிடங்கள் உள்ளவை.**

- காஷ்மீர் – சிம்லா– குலுமணாலி – டேராடூன் – டார்ஜிலிங்

**புனித தலங்கள் உள்ளவை.**

- அமர்நாத் – பத்ரிநாத் – வைஷ்ணவி கோயில்.
- காடு சார்ந்த பொருட்கள் கிடைக்கின்றன.
- இமயமைமலை ஒரு பல்லுயிர் மண்டலமாக திகழ்கிறது.

**2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

- **தென்னிந்தியாவில்** பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படும்.
- அனைத்தும் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
- கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:

**மகாநதி – கோதாவரி - கிருஷ்ணா – தாமிரபரணி**

- மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் : **நர்மதை – தபதி**

**i) மகாநதி**

- **உற்பத்தி:** சத்தீஸ்கார் மாநிலம் ராய்ப்பூர் மாவட்டம்
- **கலக்குமிடம்:** ஒடிசா மாநிலத்தின் வழியாக வங்காள விரிகுடாவில்

**ii) கோதாவரி**

- **உற்பத்தி:** மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம்
- **கலக்குமிடம்:** ஆந்திரா வழியாக வங்காள விரிகுடாவில்

**iii) கிருஷ்ணா**

- **உற்பத்தி :** மகாராஷ்டிரா –மகாபலேஷ்வர் நீர் வீழ்ச்சி
- **கலக்குமிடம் :** ஆந்திரா வழியாக வங்காள விரிகுடாவில்

**iv) காவிரி**

- **உற்பத்தி :** கர்நாடகா மாநிலம் –குடகுமலை
- **கலக்குமிடம்:**தமிழகம் வழியாக வங்காள விரிகுடாவில்

**v) நர்மதை**

- **உற்பத்தி:** மத்தியபிரதேசம் –அமர்கண்டாக் பீடபூமி
- **கலக்குமிடம் :** அரபிக்கடல்

**vi) தபதி**

- **உற்பத்தி :** மத்தியப்பிரதேசம் –முல்டாய்
- **கலக்குமிடம் :** அரபிக்கடல்

**3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.** **(PTA-4)**


- இமயமலையின் கங்கோத்ரி இடத்தில் உற்பத்தியாகின்றது.
- உத்திரகாண்ட் மாநிலத்தில் நுழைகின்றது.
- இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைந்த நதி.
- வட இந்தியாவில் மிகப்பெரிய சமவெளியை உருவாக்குகிறது.
- கங்கை சமவெளியில் பல பெரிய நகரங்கள் உள்ளன.
- மக்கள்தொகை அதிகம் கொண்ட வடிநிலம்
- கரும்பு – கோதுமை – சணல் – வாழை – விளைச்சல் அதிகம்.


**இதன் துணை ஆறுகள்**


- கோமதி – யமுனை – சோன் – சம்பல் – கோசி
- வங்கத்தில் இதன் பெயர் பத்மா.
- பிரம்மபுத்திராவுடன் கலந்து உலகின் மிகப்பெரிய டெல்டாவை உருவாக்குகின்றது.


# புவியியல் பாடவாரியாக இந்தியா மற்றும் தமிழ்நாடு வரைபடங்கள்


[புத்தகத்தின் படி]





புவியியல் – அலகு – 1
இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு
மலைச்சிகரங்கள்
N
E
S
W
K2
நங்க பர்வதம்
தௌலகிரி
எவரெஸ்ட்
கஞ்சன் ஜங்கா
குருசிகார்
கல்சுபாய்
மஹாபலேஸ்வர்
மகேந்திரகிரி
தொட்டபெட்டா
ஆனைமுடி


புவியியல் – அலகு – 1
இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு
மலைத்தொடர்கள்
N
E
S
W
கைலாஷ் மலைத் தொடர்
சிவாலிக் மலைத் தொடர்
ஆரவல்லி மலைத் தொடர்
விந்திய மலைத் தொடர்
சாத்பூரா மலைத் தொடர்
தொடர்ச்சி
மலைகள்
கிழக்கு
வங்காள விரிகுடா
அரபிக்கடல்
இந்தியப் பெருங்
கடல்



புவியியல் – அலகு – 1
இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு
பீடபூமிகள் – தார் பாலைவனம் – தீபகற்பம் – பாக் ஜலசந்தி
N E S W
ஷில்லாங் பீடபூமி
அந்தமான்
நிகோபார் தீவுகள்
வங்காள விரிகுடா
சோட்டா நாக்பூர் பீடபூமி
பாக் ஜலசந்தி
தக்காண பீடபூமி
மால்வா பீடபூமி
இந்தியப் பெருங் கடல்
தார் பாலைவனம்
கட்ச் தீபகற்பம்
கத்தியவார் தீபகற்பம்
அரபிக்கடல்
இலட்சத்தீவுகள்


புவியியல் – அலகு – 1
இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு
சமவெளிகள் – கடற்கரைகள்
N E S W
பிரம்மபுத்திரா சமவெளி
கங்கை சமவெளி
சிந்து சமவெளி
வடசர்க்கார் கடற்கரை
சோழமண்டல கடற்கரை
கிழக்கு கடற்கரை சமவெளி
மேற்கு கடற்கரை சமவெளி
மலபார் கடற்கரை
கொங்கண கடற்கரை

## புவியியல் – அலகு – 6

### தமிழ்நாடு – இயற்கை அமைப்பு

# தமிழ்நாடு
# வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயங்கள்




# பத்தாம் வகுப்பு சமூக அறிவியல்

## அரசு பொதுத்தேர்வு வினாத்தாளில் வினா எண்:44-ன் படி


## 8இடங்களாக குறிக்கும் வகையில் அனைத்து இடங்களும்

## உள்ளடக்கிய வரைபடங்கள்

இந்தியா





தமிழ்நாடு







QUESTION NO. 44 புவியியல் வரைபடம் – 1 **PTA - 1**

**இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**




QUESTION NO. 44 புவியியல் வரைபடம் – 2 **PTA - 2**


**இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**



# குடிமையியல்

## அலகு – 1

## இந்திய அரசியலமைப்பு




### ✷ கற்றல் விளைவுகள்:

**SS1008** ➢ முக்கிய சொற்களான கூட்டாட்சி, பன்முகத்தன்மை, மதம் மற்றும் அரசியல் கட்சி போன்றவற்றை வரையறுத்தல்.

**SS1043** ➢ பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களாட்சிக்கும் இடையிலான தொடர்பை விளக்குதல்.

**SS907** ➢ அமெரிக்கப் புரட்சி, பிரெஞ்சுப்புரட்சி, ரஷ்யப் புரட்சி மற்றும் இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் போன்ற இந்தியாவையும் உலகையும் மாற்றிய சில சமூக அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகளில் பெயர்கள் இடங்கள் மற்றும் ஆண்டுகளை நினைவு கூர்தல்.

**பயிற்சி** **பக்கம் : 261**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. கீழ்க்காணும் வரிசையில் "முகவுரை" பற்றிய சரியான தொடர் எது ?** **(AUG-2022)**

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக
இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக
ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு

**[ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு]**

**2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது ?** **(JUNE-23)**

அ) ஒரு முறை ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்பொழுதும் இல்லை

**[அ) ஒரு முறை]**

**3. ஒரு வெளி நாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெற முடியும் ?**

அ) வம்சாவளி ஆ) பதிவு இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்

**[ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி (PTA-2)
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை [இ) சொத்துரிமை]

5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை. (PTA-6)
அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணி செய்தல்
ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப் பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்
[ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்]

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B. R. அம்பேத்கார் அவர்களால் “ இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா” என விவரிக்கப்பட்டது ? (SEP-2020)
அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை
[இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை]

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்தி வைக்கப்பட முடியும் ?
அ) உச்சநீதி மன்றம் விரும்பினால் ஆ) பிரதமரின் ஆணையினால்
இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்
ஈ) மேற்கண்ட அனைத்தும் [இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்]

8. நமது அடிப்படைக் கடமைகளை -------- இடமிருந்து பெற்றோம். (HY-2019)
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு [இ) ரஷ்யா அரசியலமைப்பு]

9. எந்த பிரிவின் கீழ் நிதி நிலை அவசரநிலையை அறிவிக்க முடியும் ? (MAY-2022)
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356 இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368
[இ) சட்டப்பிரிவு 360]

10. எந்தக் குழுக்கள் / ஆணையங்கள் நடுவண் – மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன ?
1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
அ) 1, 2 & 3 ஆ) 1 &2 இ) 1 &3 ஈ) 2& 3 [ஆ) 1 &2]

## கூடுதல் வினாக்கள்

11. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 14 வழங்குவது. (PTA-5)
அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆ) பாகுபடுத்துவதைத் தடை செய்தல்
இ) சமவாய்ப்பளித்தல் ஈ) பட்டங்களை நீக்குதல்
[அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்]

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை **அமெரிக்க ஐக்கிய நாட்டில்** தோன்றியது. **(QY-2019, JUNE-23)**
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக **Dr. சச்சிதனாந்த சின்ஹா** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு **1949 நவம்பர் 26**
4. சட்டப்பிரிவு 32–இல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிப் பேராணைகளின் எண்ணிக்கை **ஐந்து.**
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் **51 A** பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | குடியுரிமைச் சட்டம் | ஜவகர்லால் நேரு | **1955** |
| 2. | முகவுரை | 42 வது அரசியலமைப்புச் சட்ட திருத்தம் | **ஜவகர்லால் நேரு** |
| 3. | குறு அரசியலமைப்பு | 1955 | **42 வது அரசியலமைப்புச் சட்ட திருத்தம்** |
| 4. | செம்மொழி | 1962 | **தமிழ்** |
| 5. | தேசிய அவசரநிலை **(PTA-4)** | தமிழ் | **1962** |

## IV. குறுகிய விடை தருக.

**1. அரசியலமைப்பு என்றால் என்ன ?**

- ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு எனப்படும்.
- இது ஒரு நாட்டு முன்னேற்றத்தின் அச்சாணி போன்றது.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன ?** **(PTA-5)**

- சிட்டிசன் எனும் சொல் “ சிவிஸ்” என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர் என்பதைக் குறிக்கும்.
- ஒரு நாட்டின் நகர அரசில் வாழ்வதற்கான உரிமை குடியுரிமை எனப்படும்.

**3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக** **(JUNE-2023)**

இந்திய அரசியமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. ஆனால் தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன.

1. சமத்துவ உரிமை
2. சுதந்திர உரிமை
3. சுரண்டலுக்கெதிரான உரிமை
4. சமயச் சார்பு உரிமை
5. கல்வி, கலாச்சார உரிமை
6. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

**4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன ?**

**நீதிப்பேராணை**

- நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- நீதிமன்றம், சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய வெளியிடப்படும் ஆணையாகும்.

**5. நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**

1. சட்ட மன்ற உறவுகள்
2. நிர்வாக உறவுகள்
3. நிதி சார்ந்த உறவுகள்

**6. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் யாவை ?** **(QY-2019, AUG-2022)**

- 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன.
- தமிழ் – (2004)
- சமஸ்கிருதம் – (2005)
- தெலுங்கு – (2008)
- கன்னடம் – (2008)
- மலையாளம் – (2013)
- ஒடியா – (2014)

**7. தேசிய அவசர நிலை என்றால் என்ன ?** **(PTA-6)**

- போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு, ஆயுதமேந்திய கிளர்ச்சி , உடனடி ஆபத்து ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 352 ன் கீழ் அவசர நிலையை அறிவிக்கலாம்.

**வெளிப்புற அவசர நிலை:**

- வெளிநாட்டு ஆக்கிரமிப்பின் போது

**உள்நாட்டு அவசர நிலை:**

- ஆயுதமேந்திய கிளர்ச்சிகள் நடக்கும் போது

## V. விரிவான விடையளி.

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகளை விளக்குக.** **(PTA-1, SEP-2021, AUG-2022)**

- உலகில் எழுதப்பட்ட எல்லா அரசியலமைப்புகளுள் மிகவும் நீளமானது.
- இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின்அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது.
- நெகிழும் தன்மையும்,– நெகிழாத் தன்மையும் கொண்டது.
- கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது (மத்திய – மாநில அரசுகள்)
- இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- எந்தவிதமான வேறுபாடின்றி 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகிறது.

**2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** **(PTA-4, GMQ-2019, HY-2019, APR-2024)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு III ல் 12 முதல் 35 வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி விளக்குகிறுத.
- அடிப்படை உரிமைகள் “இந்தியாவின் மகாசாசனம்'' என அழைக்கப்படுகிறது.

**i) சமத்துவ உரிமை**

- பிரிவு 14 –சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- பிரிவு 15 – மதம், இனம் – சாதி, பாலினம் அடிப்படையில் வேறுபடுவதை தடை செய்தல்
- பிரிவு 16 – பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்பு.
- பிரிவு 17 – தீண்டாமை ஒழிப்பு
- பிரிவு 18 – இராணுவ, கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

**ii) சுதந்திர உரிமை**

- ❖ பிரிவு 19 – பேச்சுரிமை – கருத்து தெரிவிக்கும் உரிமை, இந்தியாவில் விரும்பிய இடத்தில் வாழும் உரிமை
- ❖ பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை
- ❖ பிரிவு 21 – தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- ❖ பிரிவு 21 A – தொடக்கக் கல்வி பெறும் உரிமை
- ❖ பிரிவு 22 – தடுப்புக்காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

**iii) சுரண்டலுக்கு எதிரான உரிமை**

- ❖ பிரிவு 23 – கட்டாய வேலை – கொத்தடிமை முறையைத் தடுத்தல்
- ❖ பிரிவு 24 – குழந்தை தொழிலாளர் முறையைத் தடுத்தல்,

**iv) சமய ச்சார்பு உரிமை**

- ❖ பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தையும் பின்பற்றும் உரிமை
- ❖ பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை
- ❖ பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்பும் உரிமை, வரி செலுத்துவதற்கெதிரான மற்றும் சுதந்திர உரிமை.
- ❖ பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் வழிபாடு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாதிருத்தல்.

**v) கல்வி கலாச்சாரஉரிமை**

- ❖ பிரிவு 29 – சிறுபான்மையினர் எழுத்து, மொழி, கலாச்சார பாதுகாப்பு உரிமை
- ❖ பிரிவு 30– சிறுபான்மையினர் கல்வி நிறுவனம் தொடங்கும் உரிமை

**vi) அரசியலமைப்பு தீர்வு காணும் உரிமை**

- ❖ பிரிவு 32 – அடிப்படை உரிமை பாதிக்கும் போது நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

---

**3. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக. (அ) பேராணை அதிகாரங்கள் குறித்து எழுதுக.** **(PTA-6)**

- ❖ நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.
- ❖ நீதிமன்றம், சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய வெளியிடப்படும் ஆணையாகும்.
- ❖ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப்பேராணைகளை வெளியிடுகின்றது.
- ❖ உச்சநீதிமன்றம் (SUPREME COURT)“அரசியலமைப்பின் பாதுகாவலன் ” என அழைக்கப்படுகின்றது.

**i) ஆட்கொணர்வு நீதிப்பேராணை**

- ➢ சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது.

**ii) கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை**

- ➢ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**iii) தடையுறுத்தும் நீதிப்பேராணை**

- ➢ ஒரு கீழ்நீதிமன்றம் தனது சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**iv) ஆவணக்கேட்பு பேராணை**

- ➢ உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு அனுப்ப கீழ் நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை.

**v) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை**

- ➢ சட்டத்திற்குப் புறம்பாக தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.
- ➢ டாக்டர் பி. ஆர்.அம்பேத்காரின் கூற்றுப்படி அரசியலமைப்பு பிரிவு 32 இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என அழைக்கப்படுகிறது.

---

**4. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.** **(QY-2019, MAY-2022)**

| | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. | அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. |
| 2. | அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது | இது அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| 3. | இவற்றை நீதிமன்ற சட்டத்தின் மூலமாக செயல்படுத்த முடியும். | இவற்றை எந்தவகை நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| 4. | இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதல் பெற்றவை ஆகும். |
| 5. | நாட்டின் அரசியல் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றது. | இதனை செயல்படுத்தும் போது சமுதாயம், பொருளாதாரம், ஜனநாயகம் உறுதியாகிறது. |

## கூடுதல் வினாக்கள்

**5. இந்திய குடிமகனின் அடிப்படைக் கடமைகளைக் குறிப்பிடுக ?** **(PTA-4)**

- இந்திய குடிமகனின் கடமைகளை அரசியலமைப்பு சட்டப்பிரிவு **51** A– வலியுறுத்துகிறது.
- ஒவ்வொரு இந்திய குடிமகனும் அரசியலமைப்பு அதன் கொள்கைகள், தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய சின்னங்களை மதித்து நடக்க வேண்டும்.
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டும்.
- தேசப் பாதுகாப்பிற்கு தேவைப்படும் போது பணியாற்ற வேண்டும்.
- சாதி ,சமய வேறுபாடுகளை களைந்து சகோதரத்துவத்துடன் பழக வேண்டும்.
- பெண்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்.
- நமது உயர்ந்த, பராம்பரிய கலை கலாச்சாரத்தை மதிக்க வேண்டும்.
- இயற்கை சூழலை பாதுகாத்து காக்க வேண்டும்.
- பொதுச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும்.
- **6** முதல் **14** வயது வரையுள்ள குழந்தைகளின் கல்வி பெற வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி

## சுருக்கமாக விடையளி.

**1. அரசியலமைப்பு என்றால் என்ன ?**

- ஒரு நாட்டின் அரசானது எந்த அடிப்படைக் கொள்கைகளை சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு எனப்படும்.

**2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன ?** **(PTA-5)**

- சிட்டிசன் எனும் சொல் “ **சிவிஸ்” என்னும் இலத்தீன் சொல்லில்** இருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர்.

**3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக**

**ஆறு அடிப்படை உரிமைகள் தற்போது உள்ளன.**

- சமத்துவ உரிமை
- சுதந்திர உரிமை
- சுரண்டலுக்கெதிரான உரிமை
- சமயச் சார்பு உரிமை
- கல்வி, கலாச்சார உரிமை
- அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

**4. நீதிப்பேராணை (Writ ) என்றால் என்ன ?**

**நீதிப்பேராணை**

- **நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படுவது.**
- நீதிமன்றம் சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய வெளியிடுகிறது.

5. நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.

**3 தலைப்பு பட்டியல்**

1. சட்ட மன்ற உறவுகள்
2. நிர்வாக உறவுகள்
3. நிதி உறவுகள்

**6. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை ?**

- ➢ செம்மொழிகள் மொத்தம் ஆறு.
- ➢ தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா

**7. தேசிய அவசர நிலை என்றால் என்ன ?** (PTA-6)

- ➢ போர் அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு
- ➢ ஆயுதமேந்திய கிளர்ச்சி நடத்தல்
- ➢ உடனடி ஆபத்து ஏற்பட்டால்
- ➢ குடியரசுத் தலைவர் **தேசிய அவசர நிலை அறிவிக்கலாம்.**

## விரிவான விடையளிக்கவும்.

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.** (PTA-1)

- ❖ உலகில் இந்திய அரசியலமைப்பு மிகவும் நீளமானது.
- ❖ இதன் அம்சங்கள் பல்வேறு நாடுகளில் இருந்து பெறப்பட்டது.
- ❖ நெகிழும் தன்மை – நெகிழாத் தன்மை கொண்டது.
- ❖ கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
- ❖ இந்தியாவை சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.
- ❖ அனைவருக்கும் சுதந்திரமான நீதியை வழங்குகிறது.
- ❖ வயது வந்தோர் வாக்குரிமை அளிக்கிறது.
- ❖ ஒற்றைக் குடியுரிமை வழங்குகிறது.

**2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** (PTA-4)

- ❖ இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி **III** பிரிவு
- ❖ இந்தியாவின் மகாசாசனம்.

**சமத்துவ உரிமை**

- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

**சுதந்திர உரிமை**

- ❖ பேச்சுரிமை
- ❖ கருத்து சொல்லும் உரிமை

**சுரண்டலுக்கெதிரான உரிமை**

- ❖ கட்டாய வேலை – கொத்தடிமை தடுத்தல்
- ❖ குழந்தை தொழிலாளர் தடுத்தல்

**சமய சார்பு உரிமை**

- ❖ எந்த சமயத்தையும் பின்பற்றும் உரிமை

**கல்வி, கலாச்சார உரிமை**

- ❖ கல்வி நிறுவனம் தொடங்கும் உரிமை

**அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை**

- ❖ மேல் முறையீட்டு உரிமை
- ❖ நீதிமன்றம் அணுகி உரிமை பெறும் உரிமை

**3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.**

- ❖ உச்சநீதிமன்றம் **“அரசியலமைப்பின் பாதுகாவலன் ”** என அழைக்கப்படுகின்றது.
- ❖ நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தில் வெளியிடப்படும் ஆணை நீதிப் பேராணை எனப்படும்.
- ❖ இவை ஐந்து வகையான நீதிப்பேராணைகள்.

**i) ஆட்கொணர்வு நீதிப்பேராணை**

- ❖ சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது.

**ii) கட்டளையுறுத்தும் நீதிப் பேராணை**

- ❖ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனு தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**iii) தடையுறுத்தும் நீதிப்பேராணை**

- ❖ ஒரு கீழ் நீதிமன்றம் தனது சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைத் தடுக்கிறது.

**iv) ஆவணக்கேட்பு பேராணை**

- ❖ உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாமான பரிசீலனைக்கு அனுப்ப கீழ் நீதிமன்றங்களுக்குஆணையிடும்.

**v) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை**

- ❖ சட்டத்திற்குப் புறம்பாக தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதை தடை செய்கிறது.

**4. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.**

| | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. | அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டவை. |
| 2. | அரசாங்கத்தால் கூட சுருக்கவோ, நீக்கவோ முடியாது | அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| 3. | இவற்றை நீதிமன்ற சட்டத்தின் மூலமாக செயல்படுத்த முடியும். | இவற்றை எந்தவகை நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| 4. | இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதல் பெற்றவை ஆகும். |

# பொருளியல்

## அலகு – 1

## மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்



### ✷ கற்றல் விளைவுகள்:

**SS1004** ➢ பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புடைய அடிப்படை பொருளாதார சொற்களான மனித மூலதனம், நிலையான வளர்ச்சி, மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த மதிப்பு கூடுதல், தனிநபர் வருமானம், மனித வள மேம்பாட்டுக் குறியீடு, பன்னாட்டு நிறுவனம், வெளிநாட்டு வர்த்தகம், தாராளமயமாக்கல் மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்றவற்றை வரையறுத்தல்.

**SS1013** ➢ சில முக்கிய நாடுகளின் தலா வருமானத்தை (PCI) ஒப்பிடுதல்.

**SS1015** ➢ பல்வேறு அடிப்படைப் பிரிவுகளை பயன்படுத்தி தொழில்கள் மற்றும் பொருளாதார செயல்பாடுகளை துறைவாரியாக வகைப்படுத்துதல்.

**பயிற்சி** **பக்கம் : 319**

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

**1. GNP யின் சமம்**

அ) பண வீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP

ஆ) பண வீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP

இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

**[இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்]**

**2. நாட்டு வருமானம் அளவிடுவது**

அ) பணத்தின் மொத்த மதிப்பு

ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு

இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு

ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

**[ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு]**

**3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது** **(AUG-2022, JUNE-23)**

அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி **[அ) வேளாண்மை]**

**4. ---------- முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.**

அ) செலவு முறை ஆ) மதிப்புக் கூட்டு முறை இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

**[ஆ) மதிப்புக்கூட்டு முறை]**

**5. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018–19 ல் ----- லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.**

அ) 91.06 ஆ) 92.26 இ) 80.07 ஈ) 98.29 **[ஆ) 92.26]**

**6. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ---------- அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.**

அ) 1 வது ஆ) 3வது இ) 4 வது ஈ) 2 வது **[ஈ) 2 வது]**

**7. இந்தியாவில் சராசரி ஆயுட்காலம் --------- ஆண்டுகள் ஆகும்.**

அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55 **[அ) 65]**

**8. கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை ?**

அ) நீர்ப்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை

இ) நில சீர்திருத்தக்கொள்கை ஈ) கூலிக்கொள்கை

**[ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை]**

## கூடுதல் வினாக்கள்

**9. நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது ---------** **(PTA-2)**

அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம் ஆ) மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்

இ) தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

**[அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்]**

**10. அமர்த்தியா சென் ஒரு ---------** **(PTA-5)**

அ) மருத்துவர் ஆ) இயற்பியல் வல்லுநர் இ) பொருளாதார அறிஞர் ஈ) விண்வெளி வீரர்

**[இ) பொருளாதார அறிஞர்]**

**11. GDP-யில் எந்தத் துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது ?** **(PTA-5)**

அ) வேளாண் துறை ஆ) தொழில்துறை இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**[இ) பணிகள் துறை]**

**12. தலா வருமானம் என்பது** **(QY-2019)**

அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை

இ) நிகர நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை

**[அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் **வேளாண்மை** துறை முதன்மை துறையாகும். **(APR-2024)**
2. **தலா வருமானம்** மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
3. இரண்டாம் துறையை வேறுவிதமான **தொழில் துறை** என அழைக்கலாம். **(AUG-2022)**

## கூடுதல் வினாக்கள்

4. இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் **பணிகள்** துறையாகும். **(PTA-6)**

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் | நாட்டு வருமானம்/ மக்கள்தொகை | **தொழில்துறை** |
| 2. | விலைக்கொள்கை | மொத்த உள் நாட்டு உற்பத்தி | **வேளாண்மை** |
| 3. | GST | தொழில்துறை | **பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி** |
| 4. | தலா வருமானம் | வேளாண்மை | **நாட்டு வருமானம் / மக்கள்தொகை** |
| 5. | C +I +G+(X-M) | பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி | **மொத்த நாட்டு உற்பத்தி** |

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. **நாட்டு வருமானம் வரையறு.** **(QY-2019)**
   - நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.
   - பொதுவாக நாட்டு வருமானமானது மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

2. **மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன ?** **(PTA-6, APRIL-2023)**
   - மொத்தஉள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மொத்த மதிப்பாகும்.

3. **GDP யின் முக்கியத்துவத்தை எழுதுக.** **(MAY-2022)**
   - வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
   - பொருளாதார திட்டமிடுதலுக்கு வழிகாட்டியாக பயன்படுகிறது.
   - உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்ய பயன்படுகிறது.
   - பொதுத்துறை நிறுவனங்கள் பற்றி அறிய பயன்படுகிறது.
   - பண வீக்கம் – பண வாட்டத்தின் சிக்கல்கள்பற்றி அறிய உதவுகிறது.

4. **தனி நபர் வருமானம் என்றால் என்ன ? (அ) தலா வருமானம் என்றால் என்ன ?** **(PTA-3, GMQ-2019, HY-2019)**
   - நாட்டு வருமானத்தை மொத்த மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

   - தனிநபர் வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

5. **மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.**
   - மதிப்பு கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடமுடியும்.

**மதிப்பு கூட்டு முறையைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.**
   - இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு ⟶ இறுதி பண்டத்தின் மொத்த மதிப்பு
   - (டீ தூள் + பால் + சர்க்கரை) ⟶ (தேநீர்)

**6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**

- வேளாண்மைக் கொள்கை
- தொழில் துறைக் கொள்கை
- புதிய பொருளாதாரக் கொள்கை

**7. சிறு குறிப்பு வரைக. 1. மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) 2. மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)**

**1. GNH மொத்த தேசிய மகிழ்ச்சி.**

- '**GNH**' என்ற வார்த்தையை 1972–ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹுக் என்ற பூட்டான் அரசர்.
- இவர் மும்பை விமான நிலையத்தில் நிதி காலங்கள் (Financial times) என்ற நாளிதழுக்கு பிரிட்டிஷ் பத்திரிக்கையாளர் நேர்காணலில் GNPஐ விட GNH மிக முக்கியம் என்றார்.
- 2011–இல் ஐக்கிய நாடுகள் சபை "வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

**2. HDI மனித மேம்பாட்டுக் குறியீடு.**

- இவை 1990 இல் பாகிஸ்தான் பொருளியல் அறிஞர் முகஹப் உல் ஹக் அறிமுகம் செய்தார்.
- பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத்தரம், GDPயின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு, வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

**1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி ?** **(PTA-1, SEP-2021)**

**i) மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.
- வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.
- GNP = C + I + G + (X - M) + NFIA

**ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

- ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**iii) நிகர நாட்டு உற்பத்தி (NNP)**

- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

**iv) நிகர உள்நாட்டு உற்பத்தி NDP**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

**v) தலா வருமானம் (PCI)**

- தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**vi) தனிப்பட்ட வருமானம்(PI)**

❖ நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

**vii) செலவிடத் தகுதியான வருமானம் (DI)**

❖ நமது வருமானத்தில் நுகர்வுக்கு செலவு செய்யும் தொகை செலவிடத் தகுதியான வருமானம் எனலாம்.

❖ DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி

**2. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை ? அவைகளை விவரி ? (PTA-4, HY-19, GMQ-19, AUG-2022, APR-2024)**

**i) செலவின முறை**

❖ ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப்பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.

$$Y = C + 1 + G + (X - M)$$

**ii) வருமான முறை**

❖ பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியில் ஈடுபடும் ஆண்கள் மற்றும் பெண்கள் வருமானத்தின் அடிப்படையில் கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கூறுகிறது.

**வருமானம் = கூலி + வாரம் + வட்டி + இலாபம்**

**iii) மதிப்பு கூட்டு முறை**

❖ இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டும் போது இறுதிப்பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.

❖ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் போது பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

❖ டீத்தூள் + பால் + சர்க்கரை = தேநீர்

❖ இடைநிலைப் பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு

**3. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக. (QY-19)**

| வ.எண் | ஒப்பீடுகள் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | கருத்து | இது ஒரு குறுகிய கருத்து | இது ஒரு பரந்த கருத்தாகும் |
| 2 | அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| 3 | கால வரம்பு | குறுகிய காலத்தை உடையது | நீண்ட காலத்தை உடையது |
| 4 | பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வரும் நாடுகள் |
| 5 | நிகழ்வின் அதிர்வெண் | குறிப்பிட்ட கால செயல்முறை | தொடர்ச்சியான செயல்முறை |

**4. கீழ்க்காணும் பொருளாதார கொள்கைகளை விவரி.**

**வேளாண்கொள்கை – தொழிற்கொள்கை – புதிய பொருளாதாரக் கொள்கை**

**i) வேளாண்கொள்கை**

❖ உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதி பொருள்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.

❖ இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டு பொருள்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண் கொள்கையில் அடங்கும்.

❖ சில வேளாண் கொள்கைகள்: விலைக்கொள்கைகள், நிலச்சீர்திருத்த கொள்கைகள், உணவுக்கொள்கைகள், பசுமைப்புரட்சி, பாசனக் கொள்கைகள், கூட்டுறவுக் கொள்கைகள்

**ii) தொழிற்கொள்கை**

❖ தொழில்துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும்.

❖ இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.

❖ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

❖ பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.

- ❖ விவசாயத்துறை மற்றும் பணிக துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன.
- ❖ இது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.
- ❖ 1948 லிருந்து பல தொழில்துறை கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கு ஏற்படுத்தப்பட்டது.

**iii) சில தொழில் துறை கொள்கைகள் பின்வருமாறு**

- ❖ ஜவுளித் தொழில் கொள்கை
- ❖ சர்க்கரை தொழில் கொள்கை
- ❖ தொழில்துறை வளர்ச்சி விலைக் கொள்கை
- ❖ சிறு தொழில் தொழிற் கொள்கை மற்றும் தொழில் துறை தொழிலாளர் கொள்கை போன்றவைகளாகும்.

**iv) புதிய பொருளாதாரக் கொள்கை**

- ❖ 1990 களில் இந்தியாவில் பொருளாதாரக் கொள்கை மாற்றம் பெறத் தொடங்கியது.
- ❖ இந்தியாவின் புதிய பொருளாதார கொள்கை **LPG** ஆகும்.
- ❖ **LPG** அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என அழைக்கப்படுகிறது.
- ❖ நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றம் அடையச் செய்வதாகும்.

## மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பகுதி

### சுருக்கமாக விடையளி.

**1. நாட்டு வருமானம் வரையறு.**

- ➢ நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன ? (PTA-6)**

- ➢ மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**3. GDP யின் முக்கியத்துவத்தை எழுதுக.**

- ➢ நாட்டின் பொருளாதார நலன் பிரதிபலிக்கிறது.
- ➢ நாட்டின் மொத்த உற்பத்தியை பிரதிபலிக்கிறது.
- ➢ உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்ய பயன்படுகிறது.
- ➢ பண வீக்கம் – பண வாட்டம் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.

**4. தனி நபர் வருமானம் என்றால் என்ன ?**

- ➢ தனிநபர் வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
- ➢ தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

**5. மதிப்புக் கூட்டு முறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.**

- ➢ மதிப்பு கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடமுடியும்.
- ➢ டீ தூள் + பால் + சர்க்கரை = **தேநீர்**

**6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**

- ➢ வேளாண்மைக் கொள்கை
- ➢ தொழில் துறைக் கொள்கை
- ➢ புதிய பொருளாதார கொள்கை

**7. சிறு குறிப்பு வரைக. 1. GNH 2. HDI**

**1. GNH என்பது மொத்த தேசிய மகிழ்ச்சி.**

- ➢ நிலையான சமூக பொருளாதார வளர்ச்சி
- ➢ சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- ➢ நல்ல ஆட்சித் திறன்

**2. HDI என்பது மனித மேம்பாட்டுக் குறியீடு.**

- ➢ பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு,
- ➢ வயதுவந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத்தரம் போன்ற செயல்பாடுகள் கணக்கிடப்படுகிறது.

## விரிவான விடையளிக்கவும்.

**1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி ? (PTA-1)**

**1. மொத்த உள்நாட்டு உற்பத்தி**

- ஓர் ஆண்டில் அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

- ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பாகும்.

**3. நிகர உள்நாட்டு உற்பத்தி**

- நாட்டின் மொத்த உற்பத்தியில் தேய்மானம் கழித்தபின் கிடைக்கும் நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

**4. தலா வருமானம்**

- தலா வருமானம் = $\frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

**5. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை கழித்த பின் கிடைப்பது.

**6. தனிப்பட்ட வருமானம்**

- நேர்முக வரி – தனிநபர்கள் வரி – நாட்டின் அனைத்து வருவாய்களில் இருந்து பெறப்படும் பண வருமானம்

**7. செலவிடத் தகுதியான வருமானம்**

- நமது வருமானத்தில் செலவு செய்யும் தொகை
- வருமானம் வரி கட்டுதல் – நுகர்வுச் செலவு – சேமிப்பு முதலீடு.

**2. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி ?**

**செலவின முறை**

- நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப்பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகை
- Y = C + 1 + G + (X - M)

**வருமான முறை**

- நாட்டில் பண்டங்கள் உற்பத்தி செய்யும் ஆண்கள் பெண்கள் வருமானம்
- வருமானம் = கூலி+ வாரம்+வட்டி+இலாபம்

**மதிப்பு கூட்டு முறை**

- இடைநிலைப் பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது இறுதிப்பண்டத்தின் மதிப்பை அளவிடுதல்
- டீத்துாள் + பால் + சர்க்கரை = தேநீர்

**3. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.**

| வ.எண் | ஒப்பீடுகள் | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | கருத்து | இது ஒரு குறுகிய கருத்து | இது ஒரு பரந்த கருத்தாகும் |
| 2 | அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| 3 | கால வரம்பு | குறுகிய காலத்தை உடையது | நீண்ட காலத்தை உடையது |
| 4 | பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வரும் நாடுகள் |
| 5 | நிகழ்வின் அதிர்வெண் | குறிப்பிட்ட கால செயல்முறை | தொடர்ச்சியான செயல்முறை |
| 6 | அரசாங்க உதவி | இது ஒரு தானியங்கி செயல்முறையாகும் | அரசாங்கத் தலையீட்டை அதிகம் நம்பியுள்ளது |

**4. கீழ்க்காணும் பொருளாதாரக் கொள்கைகளை விவரி.**

**1. வேளாண் கொள்கை**

- உள்நாட்டு வேளாண்மை வளர்ச்சி
- விவசாயிகள் வருமானம் அதிகம் பெறுதல்
- வேளாண்மை இடர்கள் களைதல், – விலைக்கொள்கைகள்,
- நிலச்சீர்திருத்த கொள்கைகள், உணவுக்கொள்கைகள், பசுமைப்புரட்சி.

**2. தொழிற் கொள்கை**

- வேலை வாய்ப்பு வழங்குதல்
- புதிய தொழில் நுட்பம் உருவாக்குதல்
- தொழிலாளர் வருமானம் பெறுதல் வேலைவாய்ப்பு அதிகரிப்பு,

**3. புதிய பொருளாதாரக் கொள்கை**

- தாராளமயம் – உலகமயமாதல் – தனியார் மயம்

# செப்டம்பர் – 2020

**பகுதி – I**

**(மதிப்பெண்கள் : 14)**

**குறிப்பு: (i) அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14**

**(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது ?**

அ) டெல்வில்லி ஆ) ஆரஞ்சு நாடு

இ) அடோவா ஈ) அல்ஜியர்ஸ்

**2. ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தான நாள் :**

அ) ஜூன் 26, 1942 ஆ) ஜூன் 26, 1945

இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

**3. ‘சத்யார்த்த பிரகாஷ்’ எனும் நூலின் ஆசிரியர் :**

அ) சுவாமி தாயனந்த சரஸ்கூணி

ஆ) ஆத்மராம் பாண்டுரங்

இ) அன்னி பெசன்ட் ஆ) தேவேந்திரநாத்

**4. எந்த கிளர்ச்சியின் பின்னணியில் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது ?**

அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி

இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்

**5. கூற்று** : காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939 ஆம் ஆண்டு பதவி விலகின. **(PTA-4)**

**காரணம்** : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது. ஆனால் காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

ஆ) கூற்று சரியானது ஆனால் காரணம் தவறானது.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது.

ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

**6. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்.**

அ) கெல்லேறு ஏரி ஆ) வேம்பநாடு ஏரி

இ) சிலிகா ஏரி ஈ) பழவேற்காடு ஏரி

**7. பொன் புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது ?**

அ) உருளைக் கிழங்கு ஆ) எண்ணெய் வித்துக்கள்

இ) தேன் ஈ) சணல்

**8. தேசிய காற்றாற்றல் நிறுவனம் அமைந்துள்ள இடம்:**

அ) ஃபரிதாபாத் ஆ) சென்னை

இ) கன்னியாகுமரி ஈ) விழிஞ்சம்

**9. பின்னடையும் பருவக்காற்று எந்த கடலிலிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.**

அ) அரபிக்கடல் ஆ) வங்கக் கடல்

இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க் கடல்

**10. பேரிடர் அவசரகால தொலைபேசி எண் ___________**

அ) 1095 ஆ) 1944

இ) 1098 ஈ) 1077

**11. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B. R. அம்பேத்கார் அவர்களால் “ இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா” என விவரிக்கப்பட்டது ?**

அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை

இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

ஈ) சொத்துரிமை

**12. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்.**

அ) மவுண்ட்பேட்டன் பிரபு ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்

இ) கிளமன்ட் அட்லி ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை

**13. ஒரு நல்ல பொருளாதாரம் இதனின் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.**

அ) பண மானியங்கள் ஆ) மூலதன சந்தை

இ) வரி சலுகைகள் ஈ) சொத்து உரிமைகள்

**14. சரியில்லாத கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:**

அ) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக்காரணமாகும்.

ஆ) கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறையாகும்.

இ) கருப்பு பணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்.

ஈ) வரி விகிதம் குறைவாக இருக்கும் போது அதிக கருப்பு பணம் தோன்றுகிறது.

அ) (i) மற்றும் (ii) மட்டும் ஆ) (iv) மட்டும்

இ) (i) மட்டும் ஈ) (ii) மற்றும் (iii) மட்டும்

## பகுதி – II

**(மதிப்பெண்கள் : 20)**

**குறிப்பு: (i)** எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x2=20**

**(ii)** 28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

**15.** ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.

**16.** முத்து துறைமுக நிகழ்வை விவரிக்கவும்.

**17.** சுவாமி விவேகானந்தரின் 'செயல்பாட்டாளர்' சித்தாந்தத்தின் தாக்கமென்ன ?

**18.** ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன ?

**19.** திருப்பூர் குமரனின் வீரமரணம் குறித்து சிறு குறிப்பு வரைக.

**20.** பருவமழை வெடிப்பு என்றால் என்ன ?

**21.** கலப்பு வேளாண்மை என்றால் என்ன ?

**22.** தகவல் தொடர்பு என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

**23.** கடல் பாதுகாப்பு மேலாண்மையில் சதுப்பு நிலத்தாவரங்களின் பங்கு என்ன ?

**24.** இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?

**25.** பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**26.** GDP–யில் பங்களிப்புள் துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

**27.** வளர்வீத வரி என்றால் என்ன ?

**28.** நமது இந்திய நாட்டின் வெளியுறவு கொள்கையின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

## பகுதி – III

**(மதிப்பெண்கள் : 50)**

**குறிப்பு: (i)** எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **10x5=50**

**(ii)** 42வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

**29. கோடிட்டஇடங்களை நிரப்புக:**

**(i)** இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் ______ஐ விரும்பவில்லை.

**(ii)** அல்பைன் காடுகளில் காணப்படும் மரங்கள், ______ மரங்கள் என அழைக்கப்படுகின்றன.

**(iii)** இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ____________ என அழைக்கப்படுகிறது.

**(iv)** இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ______.

(v) அமெரிக்காவிலிருந்து _____________ அமைப்பு இந்தியாவில் HYV–ஐ அறிமுகப்படுத்தியது.

**30.** வேலு நாச்சியார் பற்றி விரிவாக விடையளிக்கவும்.

**31.** முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.

**32. (அ) வேறுபடுத்துக.**

**(i)** வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.

**(ii)** சாலை வழிபோக்குவரத்து, இரயில் வழி போக்குவரத்து.

**(ஆ) காரணம் கூறுக:**

கிழக்கு தொடர்ச்சி மலையானது தொடர்ச்சியற்ற குன்றுகளாகும்.

**33.** ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க.

**34.** 1857 – ஆம் ஆண்டின் பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.

**35.** இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைச் சமவெளிகளைப் பற்றி விளக்குக.

**36.** நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் தாக்கங்களை விளக்குக.

**37.** ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் பற்றி விவரிக்கவும்.

**38.** அண்டை நாடுகளுடன் நட்புறவினைப் பேண இந்தியா பின்பற்றும் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளைப் பட்டியலிடுக.

**39.** உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

**40.** இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.

**41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:**

1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.

**42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

(i) மீரட்

(ii) பாரக்பூர்

(iii) தண்டி

(iv) சௌரி சௌரா

(v) வேதாரண்யம்

**பகுதி –IV**

**(மதிப்பெண்கள் :16)**

**குறிப்பு :** (i) இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x8=16**

**43. (அ) (i)** ஹோ சி மின் பற்றியும் வியட் மின் கட்சியின் உதயம் பற்றியும் குறிப்பு வரைக.

**(ii)** இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றி விளக்குக.

**அல்லது**

**(ஆ)** இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்கக்கால சத்தியாகிரகங்களை விளக்குக. அவற்றின் விளைவு யாது ?

**44. (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

**(i)** K2 சிகரம்

**(ii)** கரிசல் மண் பகுதி ஒன்று

**(iii)** மும்பை ஹை

**(iv)** பாக் நீர் சந்தி

**(v)** கட்ச் வளைகுடா

**(vi)** நெய்வேலி

**(vii)** சோழமண்டல கடற்கரை

**(viii)** சென்னையிலிருந்து கொல்கத்தா வரை செல்லும் இரயில் பாதை

**(அல்லது)**

**(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

**(i)** சென்னை

**(ii)** தொட்டபெட்டா

**(iii)** கன்னியாகுமரி

**(iv)** சேலம்

**(v)** காவிரி ஆறு

**(vi)** மன்னார் வளைகுடா

**(vii)** அகத்தியர் மலை

**(vii)** வங்காள விரிகுடா

## ஏப்ரல் – 2023

**பகுதி – I**

**(மதிப்பெண்கள் : 14)**

**குறிப்பு: (i) அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14**

**(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1. உலகத்தின் எந்தப் பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை ?**

அ) ஐரோப்பா ஆ) இலத்தீன் அமெரிக்கா

இ) இந்தியா ஈ) சீனா

**2. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது ?**

அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949

இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

**3. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார் ?**

அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்

இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| சென்னை | M.K. ஸ்டோர்ஸ் - 044-25386143, F.A. ஸ்டோர்ஸ் - 97105-68240, M.R. ஸ்டோர்ஸ் - 91766-64596, அராபா புக் டிரேடர் - 044-25987868, கிங்ஸ் புக் ஹவுஸ் - 044-25367660, பிஸ்மி புக் சென்டர் - 044-25380666, லிம்ரா புக் சென்டர் - 99400-39953, பிரின்ஸ் புக் ஹவுஸ் - 044-42053926, நூர் புக் சென்டர் - 81487-23350, பழனிராஜ் - 98414-94023, தாம்பரம் : ஸ்ரீராம் அன் கோ - 044-22266431, ரெட்ஹில்ஸ் : திருமலை புக் சென்டர் - 98411-53261 |
| மதுரை | மனோ புக் சென்டர் - 0452-2621577, ஜெயம் புக் சென்டர் - 0452-2623636, வெற்றி புக் சென்டர் - 98434-61624, M.P.S.S. புக் ஷாப் - 80981-51515, சன்மதி டிரேடர்ஸ் - 97872 61333, மீனாட்சி புக் - 94432 62763, M.V. சதீஸ்குமார் - 98433-49892 |
| கோவை | மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் - 99943 43334, கண்ணன் புத்தக நிலையம் - 95858 88890, சேரன் புக் ஷாப் - 0422-2396623, முருகன் புக் டிப்போ - 93611-11510, பொள்ளாச்சி ; கலைமகள் ஸ்டோர்ஸ் - 04259-228738, அமிர்தம் பேப்பர் மார்ட் - 98651-03333, அன்னூர் - ஸ்ரீ கார்த்திகேயா ஸ்டோர்ஸ் - 94436 52226 |
| திருச்சி | ராசி பப்ளிகேசன்ஸ் - 0431-2703692, சுமதி பப்ளிகேசன்ஸ் - 0431-2703230, ஸ்ரீ முருகன் புக்சென்டர் - 0431-2703076, காயத்ரி புக் ஹவுஸ் - 97517-87873, ஸ்ரீராகவேந்திரா ஸ்டோர்ஸ் - 97887-57427, துறையூர் : கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் - 98656-58650 |
| விழுப்புரம் | சபரிநாதன் பிரதர்ஸ் - 04146-222581, புக் பார்க் - 99944-45135 |
| கள்ளக்குறிச்சி | கிருபா ஸ்டேசனரி - 04151-223114, |
| சேலம் | விக்னேஷ் புக் சென்டர் - 0427-4020409, S.V.S புக் ஷாப் - 98659-06262 |
| கடலூர் | பெல் புத்தக நிலையம் - 04142-652252 |
| சிதம்பரம் | வெற்றி புக் சென்டர் - 94432-22648, ஜெயம் புக் சென்டர் - 93630-60516 |
| தஞ்சாவூர் | ஸ்ரீனிவாசா புக் சென்டர் - 94865-25806, முருகன் பப்ளிகேசன்ஸ் - 96779-99905, கும்பகோணம் : ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ - 0435-2420750, ஒரத்தநாடு: செல்வ விநாயகா பேப்பர், - 99435-57292, R.S.V புக் சென்டர் - 9942968475 |
| திருவண்ணாமலை | பிச்சாண்டி முதலியார் - 94432 14725, K. உதயகுமார் - 94874-09687 |
| வேலூர் | பூமிநாதன் - 93451 72090, வேலூர் புக் சென்டர் - 04162-213250, திருப்பத்தூர் (வேலூர்) : ரவிக்குமார் - 97863 15453 |
| ஈரோடு | செந்தில் புக் பேலஸ் - 04242-214886, தனா புக் கம்பெனி - 99943-71123, செல்வம் புக் சென்டர் - 98431-99697, பள்ளிப்பாளையம் : அம்மன் சஞ்சீவி புக் சென்டர் - 97860-40230, பவானி : தனா புக் சென்டர் - 94862-30921, கோபி : கிராவிட்டி புக் சென்டர்-9385728528 |
| திருவாரூர் | வி. ராமச்சந்திரன் - 94866-86627 |
| ராமநாதபுரம் | ராமநாதசுவாமி புக் ஷாப் - 94434-91772, அருணா நோட் புக் சென்டர் - 98425-37005 |
| சிவகங்கை | நியூ அய்யனார் புக் ஷாப் - 9994079013, காரைக்குடி : ஞானம் புக் சென்டர் 9789886575 |
| கிருஷ்ணகிரி | ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் - 90253 13661 |
| திருநெல்வேலி | ஷியாமளா புக் ஷாப் - 94872-44633, சித்ராதேவி புக் சென்டர் - 76676-64293, ஸ்ரீகிருஷ்ணா புக்ஸ் - 98945-55484 |
| திண்டுக்கல் | அய்யனார் புக் சென்டர் - 95008-62024, பழனி : தர்சன் புக் எம்போரியம் - 8667218504 |
| திருப்பூர் | மகேஸ்வரி புக் ஸ்டால் - 94420-04254, சூர்யா பேப்பர் ஸ்டோர்ஸ் - 9994710201 |
| தேனி | மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் - 94439-29273, K. சுப்புராஜ் - 88703-16922 |
| நாமக்கல் | ஸ்ரீ கணபதி புக் சென்டர் - 70948-07585, திருச்செங்கோடு: சோழா புக் ஹவுஸ்-9842753949 |
| தர்மபுரி | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்கூல் நீட்ஸ் 9150070034 |
| தூத்துக்குடி | ஸ்ரீ துர்கா ஸ்டோர்ஸ் - 96003-33452, ஈகிள் புக் சென்டர் - 9486688333 |
| புளியங்குடி | ஸ்டூடண்ட் புக் சென்டர் - 79046-69191 |
| விருதுநகர் | சேது புக் சென்டர் - 94864-61400, அருப்புக்கோட்டை : பாலாஜி புக் சென்டர் - 94439-13738 |

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமூகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com    Visit us : www.kalvidolphin.com

BHIM    pockets

**94427 17794**
**63743 17883**